
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 867**

**பொருளடக்கம்**


யேகோவாவின் தன்மைகளும் குணவிஷேடங்களும் ............... 2

மனமேட்டிமை ........................................ 7

ஜலப்பிரளயத்தில் தெய்வீக நீதி ..................... 10

ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது ............. 14

நெப்போலியன் ........................................ 15

என் நரை மயிரை... ஷியோலில் இறங்கப்பண்ணுவீர்கள் ............ 16



**BS Tamil Version - 14**

# யேகோவாவின் தன்மைகளும் குணவிஷேடங்களும்

தேவனுக்கு துவக்கம் இருந்ததில்லை என்றும், அவர் சிருஷ்டிக்கப்படவில்லை என்றும் வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. அவருடைய தன்மைகளும் பண்புகளும் இப்பொழுது இருக்கின்றது போலவே முன்பும் இருந்தது. அவர் "**நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்**" என்று அவருடைய மாறாத தன்மையை வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. (எபி. 13 : 8; சங். 90 : 1, 2).

யேகோவாவிற்கு தெய்வீக பூரணமானது முழுமையாக இருக்கிறபடியால், அவருடைய சந்தோஷத்திற்கு துணை ஏதும் அவசியமில்லை. "நித்தியத்தை சுதந்தரித்திருக்கிறவர்" தன்னில்தானே மையங்கொண்டிருக்கிறார். (வேறு எதையும் சார்ந்து இருக்கவில்லை). அவர் தாம் பிரியப்பட்டபடியால் தேவ தூதர்களையும் மனுஷனையும் சிருஷ்டித்தார். தாராள குணமுள்ளவராய், சந்தோஷத்தை அருளுவதற்கும் திருப்திப்படுத்துவதற்கும் அதற்கு ஓர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து நன்மை செய்வதில் விருப்பம் உள்ளவராக இருக்கிறார். மேலும், தம்முடைய சிருஷ்டிகளின் உன்னத நன்மையானது தெய்வீக குணாம்சத்தின் முழுமையான அனைத்து கூறுகளையும் அதாவது தெய்வீக நீதி, அன்பு, வல்லமை மற்றும் ஞானம் ஆகியவற்றை வெளிக்காட்டும்படி அழைக்கிறது.


தேவன் அனைத்தையும் முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்

## சாத்தான் என்ற ஒருவன் உண்டு என்ற நம்பிக்கை நியாயமானது

"**கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது**" என்று பிதாவின் வல்லமையைக் குறித்து வேதாகமம் அறிவிக்கிறது. (நீதி. 15 : 3). இந்த வாக்கியமானது, நன்மையான காரியங்களும் தீமையான காரியங்களும் உண்டு என குறிப்பிடுகிறது. அதாவது, தேவன் அங்கீகரிக்கிற காரியங்களும், அவர் அங்கீகரிக்காத காரியங்களும் இருக்கின்றன என்று குறிப்பிடுகிறது. இந்த மேற்குறிப்புகள் தேவன் எங்கும் நிரம்பியிருக்கிறவர் என்று வேதவாக்கியம் குறிப்பிடும் கருத்திற்கு நெருங்கிய இசைவாக வருகிறது. அனைத்து காரியங்களைக் குறித்தும் தேவன் அறிந்தவராய் இருக்கிறார்; (தேவன் பரலோகத்தில் இருக்கிறார், அவருடைய வல்லமை எங்கும் இருக்கிறது என்பதே வேத உபதேசம்). அவர் அங்கீகரிக்காத காரியங்களை அனுமதிக்கிறார் என்பதில் இசைவிணக்கம் இல்லாமல் இல்லை. ஆனால், அவர் அதனை இறுதியில் நீக்குவார் என்று அவரே அறிவித்திருக்கிறார். "**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.**" **(சங். 145 : 20).**

வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளாகும் என்ற தெய்வீக அடிப்படையை நாம் ஒப்புக்கொள்வோமானால், "**இப்பிரபஞ்சத்தின் தேவனானவனும்**" (2 கொரி. 4 : 4), "**கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற**"-வனும் (எபே. 2 : 2), சாத்தான் என்று அழைக்கப்படக்கூடிய ஒரு ஆள்தத்துவமுடையவன் இருக்கிறான் என்று வேத புத்தகம் அறிவிக்கிறதை நாம் நிச்சயம் ஒப்புகொள்ளத் தூண்டும். இந்த உலகத்தில், தீயதத்துவங்கள் கிரியை செய்து வருகிறதோடுமட்டுமல்லாமல், இவைகளுக்கு பின்னால் அசுத்த ஆவிஜீவிகள் இருக்கிறார்கள் என்றும், சாத்தான் அவர்களுக்கு அதிபதியாக இருந்து, அவர்களின் மூலமாய் செயல்படுத்துகிறான் என்றும் வசனங்கள் கூறுகின்றன.

சாத்தான் சம்பந்தப்பட்ட சில வாக்கியங்களை ஆள்தத்துவம் இல்லாத ஒரு தீமையின் கோட்பாட்டிற்கோ அல்லது தப்பறையான தவறான செயல்பாட்டிற்கோ சரியாக பொருத்த முடியாது. உதாரணமாக, இயேசு சாத்தானைக் குறித்து "**அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்**" என்றும் "**பொய்யன்**" (யோவா. 8 : 44) என்றும் கூறுகிறார். தப்பறைகளும் தீமையான கோட்பாடுகளும் கொலைபாதகனாகவோ பொய்யனாகவோ இருக்க முடியாது. அப்படி பிரயோகிப்பதென்பது மொழியைத் தவறாக பயன்படுத்துவதாகிவிடும். ஒரு ஆள்தத்துவமுள்ள நபரே கொலை பாதகனாகவும் பொய்யனாகவும் இருக்கமுடியும். வேத வாக்கியங்கள் முழுவதிலும், சாத்தான் எனப்பட்ட ஆள்தத்து வமுள்ள ஒருவன் உண்டு என்பதையும் அவன் தேவனுக்கு விரோதமானவனாய் இருக்கிறான் என்பதையும் உறுதிப்படக் கூறுகிறது.

சாத்தான் ஒரு ஆள்தத்துவமுள்ளவனாக, தேவனுக்கு விரோதியாக, நித்திய காலமுழுவதும் அவன் தொடர்ந்து நீடித்திருப்பான் என்று நாம் எண்ணிப்பார்த்தோமானால், இந்த காரியமானது நமக்கு விசித்திரமானதாகத் தோன்றும். ஏனெனில், தெய்வீக வல்லமையைக் குறித்த நம்முடைய எண்ணமானது அதனை ஒத்துக்கொள்ளாது. சாத்தானுடைய அரசாட்சியைப் பற்றியும் அவனுடைய அழிவைப் பற்றியும் குறிப்பிடுகிற வேதவாக்கியங்களின் குறிப்பு ஒன்று நமக்கு இருக்கிறது. (எபி. 2 : 14). இந்த தகவலின் மூலமாக இந்த பாடத்தை குறித்து நமக்கு இப்போது நியாயமான, சரியான எண்ணம் இருக்கிறது. மேலும் அதிகமாக நாம் வேதவாக்கியங்களை கவனித்தோமானால், சாத்தானானவன் ஆதியிலே ஒரு

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

தீயவனாக இருக்கவில்லை, மாறாக, அவன் தன் சுயாதீனத்தை பயன்படுத்தி தன்னை தீயவனாக மாற்றி, தேவனுக்கு விரோதியாக மாறினான் என்பதைக் காணலாம். இப்போது நமக்குத் தெளிவாகவும், நியாயமானதாகவும் இந்த காரியம் காணப்படுகிறது. உண்மையில் அவன் இயங்கி வருவதை புரிந்து கொள்வதற்கு இதுவே நியாயமான அத்தாட்சியாகும்.

சாத்தான் என்ற ஒருவன் இல்லை என்று எண்ணுவதானது, தேவன் தம்முடைய வார்த்தையை இது சம்பந்தமாக மனுக்குலத்தை ஏமாற்ற அனுமதித்திருக் கிறாரென்றும், தேவன் தாமே பிசாசாக தம்மை வெளிப்படுத் தினார் என்று எண்ணுவதும் ஒன்றாகும். இத்தகைய நிலை யானது சிந்திக்க தகாததாக இருக்கிறது. மேலும், தேவனுடைய எதிராளியான சாத்தான் எனப்படுகிற ஒருவன் இருக்கிறான் என்று கூறிவிட்டு அதே சமயத்தில் அதனை ஆதரிக்கும் விதமாக தேவன் சகலத்திலும் சகலமுமாய் எங்கும் நிரம்பியிருக்கிறவராக எவ்விடத்திலும் இருக்கிறார் என்று கூறுவது நியாயமில்லாத தாகும். மேற்கூறியதில் இரண்டாம் பகுதிக்கு ஆதாரமாக வேத வசனங்கள் ஏதுமில்லை. வேத வாக்கியங்கள் சொல்லுவது என்னவெனில், ஆயிர வருட யுக முடிவில் கிறிஸ்துவானவர் பாவத்தையும் சாத்தானையும் ஜெயங்கொள்ளும்போது, அதாவது சாத்தானை அழித்து, இந்த பிரபஞ்சமானது அவருடைய இராஜ்யத்தில் தேவனோடு முழு இசைவாக மாறிய பின்னர் அவர் சகலத்திலும் சகலமுமாய் இருப்பார். (1 கொரி. 15 : 28). பின்பு நித்திய காலத்திற்கும் அவருடைய சித்தத்திற்கு விரோதமாக ஒன்றும் இருக்கப் போவதில்லை. ஆனால் இப்பொழுது, அநேக இடங்களிலும், எல்லா காலக்கட்டத்திலும் அவருக்கு எதிர்ப்பும் விரோதம் இருந்து வருகிறது. ஆனால் முடிவில், தேவன் எல்லாவற்றின்மீதும் முழு கட்டுபாட்டையும் பெற்றவராயிருப்பார்.

## யேகோவாவின் சர்வவல்லமையுள்ள தன்மை

தேவன் முழுவதும் வல்லமையால் நிறைந்தவர் என்று சொல்வதென்பது ஒரு சிக்கலான பாஷை நடையாகும், ஏனெனில், இதனை குறித்து, கேள்வி கேட்கிறவனையும், பதில் கூற முயற்சிக்கிறவனையும் பொதுவாக தவறாக இது வழிநடத்தும். இந்த வாக்கியம் சரியல்ல. அவர் முழுமையான வல்லமையுடன் மாத்திரம் இருக்கிறார் என்றால் அவர் அன்பும், நீதியும், ஞானமுடையவராக இல்லையா? அவர் இந்த ஒரே மாபெரும் வல்லமைத் தன்மையை அல்லது சக்தியை மாத்திரம் உடையவரென்றால் அவர் குறுகிய ஓர் வரையறுக்கப்பட்ட தன்மையுடையவராக இருக்கிறார் என்பதாகும். இந்த கருத்தை ஒரு நியாயமுள்ள மனம் ஏற்றுக்கொள்ளாது என்றாலும், இவ்வாறு பொதுவாக இச்சொற்றொடரை அறியாமல் சொல்வதாகும். ஆனால் பகுத்தறியும் தன்மைகளுக்கு இது மிகவும் தீங்கு விளைவிக்கிறதாக இருக்கிறது.

தேவன் எல்லாம் வல்லவராக முழுவதும் வல்லமை யுடையவராக மாத்திரம் இருக்கிறார் என்று வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. 'முற்றிலும் வல்லமையுள்ளவராக வேயிருக்கிறார்' என்பதற்கும் 'வல்லமையை பிரயோகிக்கிறார்' என்பதற்கும் குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருக்கிறது. அவர் தாம் விரும்புகிற அனைத்திலும் தமது வல்லமையை பிரயோகிப்பதற்கு ஆற்றல் உள்ளவராய் இருக்கிறார். தேவன் சாத்தானை தெய்வீக சித்தத்திற்கு இசைவாக செயல்படும்படியாக, அதற்கு மாறாக சிந்திக்காதபடி அவனைத் தெரிந்தெடுத்து சிருஷ்டித்திருக்கலாம்; அல்லது தமது வல்லமையை பிரயோகித்து அவனை நசுக்கி வெகுகாலத்திற்கு முன்பே அழித்திருக்கலாம். ஆனால், பிசாசானவன் தீய செயல்களை செய்யாமலிருக்கும்படி அவனைத் தடுக்காமல், ஆறாயிரம் ஆண்டுகளாக கிரியை செய்யும்படி அனுமதித்திருக்கிறார். எனினும்,தேவன் முடிவில் அவனை அழிப்பார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகிறது.

தெய்வீக வல்லமையானது பிரபஞ்சம் முழுவதுக்கும் பிரயோகிக்கக் கூடியதாகும். ஆனால் நம்முடைய மனங்களுக்கு 'பிரபஞ்சம்' என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வது கடினமான காரியம் ஆகும். வானவியல் ஆராய்ச்சியாளர்கள் விண்வெளியின் புகைப்படத்தின் உதவி யால் கிட்டதட்ட 125,000,000 சூரியன்களை அவர்கள் பார்க்க முடிகிறதென்று நமக்குச் சொல்கிறார்கள். அது நம்முடைய சூரிய குடும்பத்தைப் போன்று இருக்கிறது. கிட்டத்தட்ட நமது பூமியை போன்றே ஒரு பில்லியன் கோள்களுக்கு மேல் இருப்பதாக கருதப்படுகிறது. [நம்முடைய சூரிய குடும்பத்தைத் தவிர்த்து, வேறே ஒரு சூரியனைப் போன்ற நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டு 51 பெர்கசி பி (51 pergasi b) என்று பெயரிடப்பட்டுள்ளது. அது அதின் சூரியனிடமிருந்து 0.5 விண்வெளி தூரத்தில் (Astronomical unit, AU) இருக்கின்றது. தற்போதய விண்வெளி தகவல் கூறுகளின்படி 200,000,000,000 (பில்லியன்) சூரியன்கள் நமது பால்வழி அண்டத்திலேயே இருக்கிறதென கூறுகிறது.] இவை யாவும் வளர்ச்சி அடைந்து அதை சுதந்தரித்துக் கொள்ளப் போகிறவர்களுக்காக குடியிருக்கப் போகிறவர்களுக்காக ஆயத்தமாகி கொண்டு வருகிறதென அறிகிறோம். இவற்றை மகா சிருஷ்டிகர் ஏற்ற காலத்தில் செய்வார். வேத வாக்கியங்களின்படி, மனித சிருஷ்டிப்பின் மாபெரும் வேலை நம்முடைய பூமியில் தான் துவங்கியது. இந்த கோடிக்கணக்கான உலகங்களும் ஜனங்களால் நிரப்பப்பட்டு, இப்பொழுது மனுக்குலமானது கற்றுகொண்டு வருகிற பாவம் மற்றும் நீதி, ஜீவன் மற்றும் மரணம் போன்ற பாடங்களை அவர்களுக்கு மீண்டும் நடத்த அவசியம் இருக்காது என்பது எத்தனை மகிழ்ச்சியான காரியமாயிருக்கிறது. (E 1, பக்கம் 52; E 2, பக்கம் 170). எல்லாவிடங்களிலும் சட்டமும் ஒழுங்கும் ஆட்சி செய்கிறதைக் குறித்தும் எண்ணிலடங்கா விண்வெளி நட்சத்திர மண்டலங்களைக் குறித்தும் நாம் பயபக்தியுடன் நிற்போமாக! "**பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சுமில்லை வார்த்தையுமில்லை. அவைகளின் சத்தம் கேட்கப் படுவதுமில்லை**" என்ற தாவீது தீர்க்கதரிசியின் வசனங்களை நாம் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறோம். (சங். 19 : 2, 3). மனித வல்லமைக்கு அப்பாற்பட்ட ஆச்சரியமான காரியங்களைக் கண்டு, இந்த உலகங்கள் தானாக உண்டாயிற்று என்று ஒருவன் நம்புவானானால், அவனுக்கு மூளையிருந்தும், அது சங்கடத் திற்குரியதாக ஒழுங்கற்றதாகவும், சீரற்றதாகவும் இருக்கிறதென நம்மில் பலருக்கு அது காட்டுகிறது. யாரேனும், முதிர்ச்சி அடைந்த அறிவை அடைந்தபின்பு, தேவன் இல்லை என்ற முடிவுக்கு வருவார்களானால், அதாவது உண்டான அனைத்தும் ஓர் எதேர்ச்சையாய் உண்டானது என்றும், குருட்டுத்தனமாய்

உண்டாயிற்று என்றும் சொல்வார்களானால், அந்த நபரை வேத வாக்கியங்கள் இவ்வாறாக கூறுகிறது, "**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்**" (சங். 14 : 1).

இந்த பிரபஞ்சம் எண்ணிலடங்காததாக இருக்கிறது என்று வானவியல் சாஸ்திர கணக்குகள் நமக்கு காட்டுகின்றன. நமது சிருஷ்டிகரின் மகத்துவமும் மாட்சிமை தங்கிய வல்லமையும் ஏசாயா தீர்க்கதரிசி விவரித்த வண்ணமாக நாம் இப்போது காண்கிறோம். யேகோவா, **தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்துகிறார்** என்று ஏசாயா கூறுகிறார். (ஏசா. 40 : 12). தெய்வீக வல்லமையின் பிரயோகம் இந்த பிரபஞ்சம் எல்லை வரை எட்டும். அதாவது, நம்முடைய மனங்களுக்கு எட்டாத முடிவில்லா வெளியிலிருக்கும் நட்சத்திரங்கள், கிரகங்கள் மற்றும் பிற கோள்கள் வரை அவர் தமது வல்லமையைப் பிரயோகிப்பார். நம்முடைய சூரியக் குடும்பத்தை போன்று, அநேக கிரகங்கள், சூரியன், பூமி சந்திரன் மற்றும் நட்சத்திரங்களுடன் இருக்கிறதென விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இப்போது கருதுகிறார்கள். நம்முடைய சூரிய குடும்பத்தை போன்றே வேறு அநேக சூரிய குடும்பங்கள் இருக்கிறதென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நமது பூமியைப் போன்றே கிரகங்களும் இருக்கின்றன. இந்த முதல் வெளி கிரகம், சூரியனைப் போன்ற நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. அதற்கு 51 பெர்கசி பி (51 Pergasi b) என்று பெயர். அது அதின் சூரியனிலிருந்து 0.5 என்ற வானசாஸ்திர அளவில் (Astronomical Unit, AU) சுற்றுகிறது. தற்போதைய வான சாஸ்திரம் தகவல் கூறுகளின்படி, 200,000,000,000 (பில்லியன்) சூரியன்கள் நமது பால்வழி நட்சத்திர மண்டலத்திலேயே இருக்கிறதென கூறுகிறது!

இவற்றில் சில கிரகங்கள் நமது பூமியைப் போன்றே இருக்கின்றன. இவை யாவும் வளர்ச்சியடையும் செயல்பாட்டில் இருக்கின்றன. அதில் சுதந்தரிக்கிறவர்களுக்காக வாசஞ் செய்யப் போகிறவர்களுக்காக ஆயத்தமாகி கொண்டு வருகிறதென அறிகிறோம். இவற்றை மகா சிருஷ்டிகர் ஏற்ற காலத்தில் செய்வார். **அவருடைய பார்வைக்கு ஆயிர வருஷமானது, நேற்றுக் கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது** (சங். 90 : 4). நம்முடைய தேவனுடைய சமூகத்தில் நாம் எத்தனை சிறியதானவர்கள் என்று பாருங்கள்! தெய்வீக நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது மனுக்குலமானது மிக சிறியதென்றும், மிக குறைவான கனத்திற்குரியதென்றும், தெய்வீக பராமரிப்பிற்கும் அரவணைப்பிற்கும் அற்பமான பிரஜைகளாக இருக்கின்றனர் என சில பேரறிஞர்கள் சொல்வது ஆச்சரியமல்ல.

## யேகோவாவின் சர்வ ஞானம்

தேவன் முற்றிலும் அறிவானவராய் இருக்கிறார் என்று சொல்வதும் ஒரு சரியான வாக்கியம் இல்லை. அவர் முற்றிலும் அறிவானவராய் மாத்திரம் இருப்பார்களேயானால், அவர் எப்படி முழு வல்லமையுள்ளவராய் இருக்க முடியும்? தேவன் சகல அறிவையும் உடையவராய் இருக்கிறார். ஆனால் இந்த வாக்கியம் சற்றே வித்தியாசமான வாக்கியமாகும். உதாரணமாக, "அந்த பையன் ஒரு வளையத்தை வைத்திருக்கிறான்" என்று நாம் கூறும்போது அவன் ஒரு வளையம் எனக் குறிப்பிடுவதில்லை, அர்த்தப்படுத்துவதுமில்லை. வளையமாயிருப்பதற்கும் வளையத்தை உடையவனாகயிருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. இரண்டும் ஒன்றல்ல. தேவன் சர்வ ஞானமும் உள்ளவர். அதாவது, அவர் எல்லா காரியங்களையும் அறிவார். ஆகையால், இந்த உண்மையே, அவர் ஒரு ஆள்தத்துவமுள்ளவர் என்பதை நிரூபிக்கிறது. ஆள்தத்துவம் இல்லாமல் எந்த அறிவும் இருக்க முடியாது. அறிவு என்பது வெளி காரியங்களில் கவனமுடைய தாயிருத்தலை அர்த்தப்படுத்துகிறது. தெய்வீகமுடைய நபரின் வெளி காரியங்கள் என்பது நன்மையும் தீமையும் உள்ளடங்கும்.

தேவன் மனிதனைத் தமது சொந்த சாயலாகவும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார் (ஆதி. 1 : 26, 27) என்று நாம் வாசிக்கிறோம். மனிதன் தேவனாக இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் அவன் தேவனுடைய குணாம்ச சாய லாகவே சிருஷ்டிக்கப்பட்டான். ஏனெனில், தேவன் பூரணராய் இருக்கிறது போல, அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனும் தேவனுடைய குணத்தை போன்ற குணத்தை உடையவனாக இருப்பான். அந்த மனுஷனாகிய ஆதாம் அறிவை உடையவனாய் இருந்தான். ஆனால் அவன் தேவனுடைய வார்த்தையை மீறி, அந்த மீறுதலினால் சிலவற்றைக் கற்றுக் கொண்டான். அவன் எதை கற்றுக் கொண்டான் என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "**நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் (ஏலோகீம்) ஒருவரைப் போலானான்**" (ஆதி. 3 : 22). இந்த வேத வாக்கியமானது தேவன் நன்மையையும் தீமையையும் அறிந்திருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது.

தேவன் நன்மை தீமையை குறித்து அறியாத வராயிருந்தால், அவர் நமக்கு ஒரு போதகராக இருக்க முடியாது. அவருடைய பிரமாணங்களாலும், அவருடைய கோட் பாடுகளினாலும், தேவன் நன்மை தீமை எது என்பதை நம்முடைய மனங்களுக்கு முன் வைத்திருக்கிறார். ஆதாம் நன்மைக்கும் தீமைக்குமுரிய வித்தியாசத்தை சீர்தூக்கிப் பார்க்க அறிந்தவனாயிருந்தான். ஆனால், கீழ்ப்படியாமையானது நன்மை பற்றியும் தீமையைப் பற்றியுமுள்ள அவனுடைய அறிவை பெருகச் செய்தது. விழுந்துபோன நிலைமையின் காரணமாக, மனிதன் எப்பொழுதும் அதின் வித்தியாசத்தை கண்டுகொள்ள முடியாது. தேவன் இஸ்ரயேலுக்கு ஒரு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தார். நியாயப்பிரமாணத்தை பற்றிய மனிதனுடைய அறிவு நன்மைக்கும் தீமைக்குமுள்ள வித்தி யாசத்தைக் கண்டுகொள்ள உதவி புரிந்தது.

"**நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்**" என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறினார். (ஏசா. 45 : 15). அது எவ்வளவு உண்மையாயிருக்கிறது! இதன் பலனாக, உலகமானது அதின் ஞானத்தால் தேவனை அறிய

வில்லை. அவர் ஞானத்திலும் அன்பிலும் நம் அருகிலிருந் தாலும், மனக்கண்கள் திறக்கப்பட்டவர்கள் மட்டுமே அவரை கண்டுகொள்ள முடியும். ஆனாலும், குருடான கண்கள் அனைத்தும் தெளிவாய் காணும் காலம் வருகிறது என்பதால் மகிழ்ச்சியாயிருக்கிறோம். யேகோவா "**பூமி யெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்கிறேன்**" என்றார். "**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்**" (எண். 14 : 21; ஆபகூ. 2 : 14). அப்பொழுது அனைவரும் தேவன் தீர்மானித்தவைகளைக் காண்பார்கள். நம்மு டைய இந்த தற்காலிகமான குருட்டுத்தன்மை, பின்னர், அவருடைய ஞானத்தையும், நீதியையும், அன்பையும் வல்லமையையும் அதன் மகிமையான வெளிச்சத்தையும் காணும்.




## "தேவன் அன்பாக இருக்கிறார்"

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதில் அன்பு என்ற வார்த்தையானது தெய்வீக குணாம்சத்தில் மையக்கோட்பாடாய் இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. தேவனுடைய அன்பிற்கு மாறாக வேறு எதுவும் இல்லை. தேவன் எல்லாவிடங்களிலும் இருக்கிறாரென்றும் அன்பும் எல்லாவிடங்களிலும் இருக்கிறது என்றும் வேத வாக்கியங்கள் போதிக்கிறதில்லை. ஆனால், அவை தேவன் அன்பான குணாம்சத்தையுடையவராக இருக்கிறார் என்று போதிக்கின்றன. தேவன் நீதியாகவும், ஞானமுள்ள வராகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார் என்ற விஷயங்களை இது எதிர்ப்பதில்லை. இந்த அன்பின் குணமானது, மற்றவைகளைக் காட்டிலும் விசேஷமாக அவர் ஒரு தெய்வீக ஆள்தத்துவமுள்ளவர் என்பதைக் காட்டுகிறது. அவருடைய நீதி அனைத்தும் அவருடைய அன்பிற்கு இணக்க மாக இருக்கிறது. நீதியையோ அல்லது வல்லமையையோ தீய கருத்தில் அவர் பிரயோகிப்பதில்லை. அவருடைய சிருஷ்டி களுக்காக அவருடைய அனைத்து குண விசேடங்களும் நன்மைக்கேதுவாகவே செயல்படுகின்றன.

தெரிந்த காரியங்களிலிருந்து தெரியாத காரியங்களைப் பகுத்தறியும்படி வேத வாக்கியங்கள் நம்மை உற்சாகப் படுத்துகின்றன. தேவன் மகா பெரியவராக, ஞானமுள்ளவராக, வல்லமையுள்ளவராக இருந்தாலும், அவர் நீதியாயும் அன்பானவராகவும் இருக்கிறார் என்று அவைகள் நமக்கு போதிக்கின்றன. இந்த காரியத்தைக் குறித்து அதிகமாய் நாம் சிந்தித்தாராய்ந்தோமானால், சர்வவல்லவரைக் குறித்த அதிக நியாயமான வேதாகம குறிப்புகள் நமக்கு கிடைக்கும். அவருடைய ஞானமானது மிக பெரிதானது, அதில் சந்தேகங் கொள்ளவே முடியாது. அதிக ஞானமும் அதிக வல்லமை யுமுடைய ஒருவர் அநீதியாயும், தயாளமில்லாதவராகவும் இருப்பாரோ? என நாம் சிந்திப்போமானால், நம்முடைய இருதயங்கள் அதற்கு, 'இல்லை'! நீதியும் அன்பும் இல்லாத ஒருவர் நிச்சயமாக பெரியவராக இருக்கவே முடியாது என்றே பதிலளிக்கிறது. ஆகையால், நிச்சயமாக, நம்முடைய தேவனாகிய யேகோவா இத்தகைய குணாம்சங்களை உடையவராகவும் வெளிப்படுத்துகிறவராக வுமே இருக்க முடியும்.

நாம் வேதாகமத்தைக் குறித்து அறிய வந்தபோது, இருண்ட யுகத்தின் போது சேர்க்கப்பட்ட தப்பறைகளிலிருந்து விலகி, குறிப்பாக வேதாகம போதனைகளில் சிலவற்றை நாம் கற்றுக்கொண்ட பிற்பாடு, அதனைத் தம்முடைய சிருஷ்டிகளுக்கான யேகோவாவினுடைய செய்தி என நாம் அங்கீகரிக்க தொடங்கினோம். இந்த முழு பிரபஞ்சத்தின் மகா சிருஷ்டிகர் சர்வ வல்லமையுள்ளவராகவும் முழுமையான ஞானமுடையவராக இருந்தாலும், அவருடைய ராஜ்யத்தின் ஆதாரமான நீதியோடுகூட அவர் அன்பானவராகவும், கனிவானவராகவும், இருக்கிறார் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. (சங். 89 : 13, 14). நம்முடைய சிருஷ்கர் நம்மை அவரது சொந்த சாயலாகவும் தமது சொந்த ரூபத்தின்படியேயும், நாம் நித்தியமாக அவருடைய நீதியின் கனிகளிலும் அவரிலும் களிகூரும்படியாக நம்மை சிருஷ்டிப்பதில் மகிழ்ச்சியடைகிறார் என்று வேதாகமத்தின் மூலமாக அறிகிறோம்.

தேவனுடைய சர்வ ஞானமும், சர்வ நீதியும், சர்வ வல்லமையும் அவருடைய சொந்த குணாம்சமாகிய அன்பிற்கு இசைவானதாகவே பிரயோகிக்கப்பட வேண்டும். அப்படி யானால், அது ஒரு அன்பின் ஞானமாகவும், ஓர் அன்பின் நீதியாகவும், தம்முடைய சிருஷ்டிகளின் நலனுக்காக தமது அன்பின் வல்லமையையும் உபயோகிப்பார். அவர் மனுஷனை சிருஷ்டித்து, அவன் அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் போகும்படி அனுமதித்தார் என்றும் மனிதன் இவ்வாறு செய்வானென்று அவர் முன்னறிந்திருந்தார் என்றும் ஆதாம் தவறு செய்ய அவர் அனுமதித்தார் என்றும் நமக்குக் கூறுகிறார். (ஏசா. 46 : 9, 10). பாவத்தை உலகத்திற்குள் நுழைய அனுமதித்ததில், தேவன் இரண்டு முடிவுகளை தமது எண்ணத்தில் வைத்திருந்தார். கீழ்படிதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் உள்ள விளைவுகள் (முடிவுகள்) சம் பந்தமாக தேவ தூதர்களுக்கு ஓர் படிப்பினையைக் கொடுக்க திட்டம் பண்ணியிருந்தார். மேலும், இந்த அனுபவத்தின் மூலமாக மனுக்குலமானது ஒரு நல்ல பாடத்தைக் கற்றுகொள்ளும் எனவும் தீர்மானித்திருந்தார். ஆதி முதற்கொண்டே மரித்தோரின் உயிர்தெழுதல் தேவனுடைய ஏற்பாடாக இருந்ததை நாம் அறிவோம். "**ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**" (1 கொரி. 15 : 21, 22).

ஒரு கோட்பாட்டிற்குரிய அடிப்படையாக வேத வாக்கியத்தின் ஏதேனும் ஒரு பகுதியை நாம் எடுத்துக் கொண்டோமானால், அந்த பகுதி, ஒன்று நாம் நம்மை

உலகளாவிய இரட்சிப்பு என போதிக்கிறவர்களாகவோ அல்லது தேவனுக்கு ஞானமில்லை என்றும் அவர் தீமையை ஏற்படுத்தினார் என்றும் போதிக்கிறவர்களாகவோ நம்மைக் காண்போம். இவற்றுக்குள் நாம் மாட்டிக் கொண்டு மொத்த குழப்பங்களுக்கும் உள்ளாவோம். ஆனால், தேவனுடைய நீதியும், ஞானமும், அன்பும், வல்லமையும், தீமை அனுமதித்தல் சம்பந்தமாக, அவர் நன்மையான உபயோகங்களை வைத்திருப்பதினால், அவைகள் (குணங்கள்) தங்களுக்குள்ளாக பூரணமாக விட்டுக்கொடுக்கிறதை நாம் காண்கிறோம். அவர், தீமையானது என்ன செய்யும், என்ன செய்யாது என்றும் அதன் தற்போதைய தாக்கம் (போக்கு) என்ன என்றும் முடிவாக என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் திட்டமாய் வகுத்து நன்மையான உபயோகங்களை வைத்திருக்கிறார். இது நமக்கு தேவனுடைய குணாம்சத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்துகிறது.

## தீமை அனுமதிக்கப்படல்

தெய்வீக ஞானத்தையும், அன்பையும் மனுக்குல சந்ததியின் வரலாற்றின் சம்பந்தமாக ஒரே ஒரு நிலைப் பாட்டிலிருந்து அதனை புரிந்து கொள்ள முடியும். அந்த வரலாற்றில் மேசியாவின் நீதியான அரசாட்சி காலமாகிய நெருங்கிக் கொண்டிருக்கும் யுகம் சேர்க்கப்பட வேண்டும். அந்த காலத்தின்போது, ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கத் தினரும் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் தண்டனையில் பங்கு பெற்று அதன் காரணமாக அவனுடைய பெலவீனத்தை சுதந்தரித்துக் கொண்ட ஆதாமின் சந்ததி இத்தகைய தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். ஒவ்வொரு மனுஷனும் தேவனுடைய மகிமையைக் குறித்த முழு அறிவைப் பெறுகின்ற அந்த காலத்தில், கீழ்ப்படிவதின் மூலமாக நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படியாக ஒவ்வொருவருக்கும் முழு வாய்ப்பு கொடுக்கப்படும்.

தேவனுடைய நற்குணங்களையும் கண்டிப்பையும் இந்த பாடம் கற்பிக்கிறது. மனுக்குலத்தையும் தூதர்களையும் நீதியாகவும், வளையாத (மாறாத) நீதியாகவும். அவருடைய நற்குணங்களின் மூலம் நம்மை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வருகிறார். அவருடைய கண்டிப்பின் மூலம் ஆதிப் பிதாவாகிய ஆதாமின் துணிகர மீறுதலுக்குத் தண்டனையளித்தார். தேவனுடைய புத்தியுள்ள சிருஷ்டிகளுக்கு அடுத்ததாக கற்பிக்கப்படும் பாடம் தேவன் அன்புள்ளவர் என்பதாகும். இந்த பாடங்களுக்கு, ஏற்கெனவே இயேசுவின் மூலமாய் செலுத்தப்பட்ட மீட்கும் பலியே அடிப்படையாக இருக்கிறது. இதன் மூலமாய் இயேசு உலகத்தின் மீட்பரும், திரும்ப கொடுக்கிறவருமாக ஆகிறார். வெகு சிலரே இந்த செய்தியை விசுவாசத்தின் மூலமாக நம்புவார்கள். ஆனால் பலருக்கு விசுவாசக் காதுகளோ அல்லது விசுவாசக் கண்களோ கிடையாது. பரிசுத்தவான்கள் மட்டுமே சுவிசேஷ யுகத்தில் இந்த உண்மையை மதித்துணரக் கூடியவர்களாய் இருந்தார்கள். அப்பொழுது அது ரகசியமாகவும், சிலரால் மட்டுமே அறிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது. இன்னும் கொஞ்ச காலத்தில் பரலோகத்திலும் பூமியிலுமுள்ள அனைத்து சிருஷ்டிகளுக்கும் அதனை அறிந்து கொள்ள முடியும். இந்த மீட்பின் வேலை இயேசுவின் பலியினால் உலகமனைத்திற்கும், அதாவது, ஆதாமின் மூலமாய் அவனது முழு சந்ததிக்கும் வந்த பாவம் மற்றும் மரண தண்டனை யிலிருந்து முழுமையாக விடுவித்ததை அனைவரும் பிற்பாடு கண்டு, இந்த உண்மையை மதித்துணரக் கூடியவர்களா யிருப்பார்கள். இவற்றை அங்கீகரிப்பவர்கள் தேவனிடமிருந்து வரும் பரிசைப் பெறுவார்கள். மீதியானவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

## இரண்டாம் மரணத்தில் ஞானம் விளங்குகிறது

தேவன் மனுஷனை அவருடைய சாயலின்படியே சிருஷ்டித்தாரானால், அவன் ஒரு சுயாதீனமான சிந்தனையுடைய வனாக இருக்க வேண்டுமென்பது அவசியம். இல்லை யென்றால் அவன் தேவனுடைய சாயலுடையவனாக இருக்க முடியாது. அவன் சுயாதீனமுள்ள மனிதனாக சிருஷ்டிக்கப் பட்டானானால், அவன் தீமையை செய்வதற்கும் நன்மை செய்வதற்கும் ஏதுவாக வல்லமையுள்ளவனாக இருக்க வேண்டும். அவன் தனது வல்லமையை தீய காரியங்களில் பிரயோகிப்பானானால், தேவன் அவனை அழிப்பதற்கு வல்லமை உள்ளவராயிருக்கிறார். மாறாக, அவன் நீதிக்கு இசைவாக ஜீவிப்பானானால், தேவன் அவனுக்கு நித்திய ஜீவனை அருளு வதற்கு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

துன்மார்க்கரை இரண்டாம் மரணத்தில் அழிப்பதில் தேவனுடைய ஞானம் வெளிப்படுகிறது. தேவனால் தீமையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது, ஏனெனில் அவர் மகா பரிசுத்தர் என்று ஆபகூ. 1 : 13 அறிவிக்கிறது. இந்த மூல வாக்கியத்தில் சொல்லப்பட்டிருப்பது என்னவெனில், தேவனுடைய குணம் மிகவும் பரிசுத்தமாயும் மிகவும் நீதியாயும் இருப்பதால் அவர் அநியாயத்தை தொடர்ந்து நோக்கி கொண்டிருக்கமாட்டார் என்பதாகும். அவர் தீமையை (அநியாயத்தை) நித்தியமாக அனுமதிக்கமாட்டார். ஏனெனில், தீமையை நித்தியமாக அனுமதிக்கும் இந்த நிலையானது அவருக்கு பிரியமான காரியமாக இருக்காது.

இந்த சிந்தனையே கொஞ்ச காலம் பார்க்கப்படக்கூடிய தீமை இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறது. அப்படியில்லா விட்டால் எப்படி அவர் அதனைப் பார்க்க முடியும்? ஆனால் இது தெய்வீகத் திட்டத்திற்கு முழு இசைவாக இருக்கின்றது. முடிவாக, அனைத்து தீமையும் அழிக்கப்படும். இறுதியில், "**வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழும்**" இருக்கிற சகல சிருஷ்டிகளும் "***சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியான வருக்கும் ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக***" என்று கூறப்படுவதைக் கேட்பார்கள். (வெளி. 5 : 13). ***

# மன மேட்டிமை

**Pride in the heart**

***“மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்”  நீதிமொழிகள் 16 : 5***

## மனமேட்டிமை வஞ்சனையுள்ளது

அடிக்கடி இந்த மனமேட்டிமையானது தாழ்மை யோடுகூட தன்னை மறைத்துவைத்துக் கொள்கிறது. நம்முடைய சொந்த அபூரணத்தன்மைகள் நம்மிடத்தில் இருக்கிறபடியால் நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்காமல் இருப்பது நமக்கு நல்லது; ஆனாலும் வெளிப்புற தோற்றத்தை வைத்து நியாயந்தீர்ப்பதை நாம் சற்று குறைத்துக் கொள்ள வேண்டியது நமக்கு சிறந்ததாகும். நமது ஆண்டவர், “**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்**” **(மத். 7 : 20)** என்று கூறுகிறார். வெளியே தெரியும் நடத்தையை வைத்து நம்மால் நியாயந்தீர்க்க முடிந்தாலும், அதற்கு அப்பால் சென்று இருதயத்தில் என்ன உள்ளது என்பதை சொல்ல முடியாது. நியாயத்தீர்ப்பின் தவறுகள் தேவனுக்கு அருவருப்பானது அல்ல. ஏனெனில் தேவன் ஒவ்வொரு தவறுகளையும் தமது இரக்கமுள்ள, கண்களினாலேயே காண்கிறார். இப்படிப்பட்ட குண சுபாவங்களுக்கு ஜனங்கள் பொறுப்பாளிகளல்ல, ஏனெனில் இவை தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு வந்ததாகும். தனிப்பட்டோரை நாம் நியாயந்தீர்க்காமல், சில நடத்தையின் விதங்களை நாம் பார்க்கும் போது சில சமயங்களில் அது பெருமையாக இல்லாவிட்டாலும்கூட அது பெருமையாகவே காணப்படு கின்றதாக இருக்கும்.



**நிறைவேறுதலான கனி**

சுயமதிப்பிலும், தற்பெருமையிலும் அதிக குறை பாடுள்ள ஜனங்களை நாம் காண்கிறோம்; அப்படிப்பட்டவர்கள் மனித அங்கீகரிப்புகளில் அதிக விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் தங்களைப்பற்றி அதிக அளவிற்கு சிந்தித்து பார்க்கிறதில்லை ஆயினும் மற்றவர்கள் தங்களை பற்றி சிந்திக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். நான் “என்னை அறிந்திருக்கிறபடி இந்த ஜனங்களும் என்னை அறிந்தார்களே யானால், நான் உலகத்தில் ஒன்றுமில்லாதவனைப் போன்றே இருப்பேன்” என்று அவர்கள் சொல்லுவர். இதில் ஓரளவிற்கு உண்மையும் இருக்கிறது. இது ஒரு பெரிய விஷயமாக இல்லாவிட்டாலும்கூட, குறைந்த அளவிலான சுயமதிப்பீட்டினை கொண்டவர்கள் அடிக்கடி பெருமையாகவே எண்ணுவர், மற்றவர்களைப் போல இவர்கள் தங்களை எண்ண முயற்சிக்கும்போது, எல்லாரைப் போன்றே தங்களையும் எண்ணிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள் தாங்கள் பிறந்த அனுகூலமற்ற சூழ்நிலையில் சாதாரணமாக பிரயாச படுகிறவர்களாக இருப்பார்கள். தேவன் இப்படிப்பட்டவர்களை வெறுக்கிறவர் என்று நாம் சிந்திக்க முடியாது. இவர்கள் எப்போதுமே தங்களை குறைவாகவே எண்ணி தேவனிடத்தில் மிகத்தாழ்மையோடே இருப்பார்கள். ஆகையால் கூடுமான வரையில் அனுகூலமான நிலைபாட்டில் தங்களை வைத்துக் கொள்ள முயலுவர். குறிப்பிட்ட அளவிற்கு இங்கு ஒரு தகுதியாம்சம் உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும். தங்களுடைய சுபாவ பெலவீனங்களை மேற்கொள்ள முயலுவது அவர்களுக்கு ஞானமான ஒன்றாகும். இவர்கள் தங்களை நிதானித்தறிய முயல வேண்டும், அதாவது தெளிந்த புத்தியுள்ள ஆவியையுடையவர்களாக காரியங்களை மிஞ்சிப்போய் நடப்பிக்க முயற்சிக்காதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் சாந்தகுணமுள்ளவர் களாக செயல்களை நடப்பித்து அதே சமயம் சாந்தத்தோடு காரியங்களை உணரவும், சிந்திக்கவும் வேண்டியவர்களாய் இருக்க வேண்டும்.

அதிக அளவிலான சுயமதிப்பீட்டினைக் கொண்ட மற்றொரு வகுப்பாரும் உள்ளனர். இவர்கள் தங்கள் மனதில் சிந்திப்பது யாதெனில், “நான் என்னை பற்றி இப்படிப்பட்ட உயர்ந்த மதிப்பினை கொண்டிருக்கிறேன் என்பதை மற்றவர்களும் அறிந்துக் கொள்ள வேண்டுமென்பது எனது விருப்பமல்ல, ஆகையால் அதை நான் மறைத்துக் கொள்ளுவேன். நான் மிகவும் தாழ்மையாக பேச முயற்சிப்பேன். தாழ்மையாக இருக்க வேண்டும் என்று வேத வாக்கியங்கள் போதிக்கின்றன. ஆகவே எதை பேசினாலும் இந்த நிலைப்பாட்டில் இருந் தேதான் நான் பேச முயற்சி செய்வேன்” என்பதே. இப்படிப்பட்ட ஜனங்கள் அடிக்கடி வெளிப்பார்வைக்கு மாத்திரம் தாங்கள் தாழ்மையாக இருப்பதுபோல வெளிப்பூச்சாகக் காணப்படுகின்றனர். சிலர் இந்த வழிமுறை சரியானது என்றும் எண்ணுகின்றனர். அவர்கள் தங்களுடைய விஷயத்தில் உண்மையுள்ளவர்களாக, நேர்மையுள்ளவர்களாக இருப்பார்களேயானால் தேவன் இதனை ஆட்சேபிக்கின்றார் என்று நாம் கருதவே மாட்டோம்.

“**மனமேட்டிமை**” என்ற இந்த வாக்கியத்தில் கூறப் பட்டிருப்பது கர்வம் கொண்ட அகந்தையுள்ள மனம் என்பது நமது எண்ணமாகும். அதாவது சுய முக்கியத்துவத்தை உணர்ந்து மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டாதபடிக்கு தங்களையே அதாவது தாங்கள் சிந்திப்பதையே அதிக உயர்வாக எண்ணி மற்றவர்களை இகழ்ந்து, நிந்திக்கிறவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு நபரின் இருதயம் தேவனோ அல்லது வேறு ஒருவரும் அன்பு கூரக்கூடிய இருதயமாக

இருக்காது. இது தேவனுடைய பார்வையில் அருவருக்கப் படத்தக்கதாகும்.

## ஏன் மேட்டிமை எதிர்க்கப்படத்தக்கது

ஒரு அருவருக்கப்படத்தக்கதான விஷயமானது மிகவும் அதிருப்தியூட்டுகிறதாகவும் வெறுப்பூட்டுகிறதாகவும் இருக்கிறது. இது ஒரு மனிதனை மகிழ்விக்காதபடி செய்கிறது. இதற்கு இடங்கொடாதபடி அதனைக் கடிந்து கொள்ளப்பட வேண்டும். மேட்டிமைக்கு எதிராக தாம் இருப்பதாக தேவன் ஏன் அறிவித்துள்ளார், என்பதற்கு ஏதோ சில காரணங்களிருக்கும். மேட்டிமை கொள்ளத்தக்கதாக ஒருவனும் ஒன்றையும் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அப். பவுல் அறிவுறுத்துகிறபடி, "**அன்றியும் உன்னை விசேஷித்த வனாகும்படி செய்கிறவர்யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?**" (**1 கொரி. 4 : 7**) என்பதே. ஆக நமக்கு உண்டாயிருக்கிற வைகளில் தேவனிடத்திலிருந்து நாம் பெற்று கொள்ளாதது என்ன? எதையாகிலும் ஒன்றை நாம் ஒரு வெகுமதியாக பெற்றுக் கொண்டோமேயானால், அதை பற்றி நாம் மேன்மைப்பாராட்ட என்ன அதிகாரம் நமக்குண்டு? நிச்சயமாக அப்படியிருந்தால் இது மனதின் மிகத்தவறான நிலைப்பாடாக இருக்கும். ஏனெனில் இது ஒரு வெகுமதியே தவிர நாம் மேன்மைபாராட்ட இது நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ சொந்தமானதொன்றல்ல.




ஆகவே ஒருவரும் மேன்மைப்பாராட்ட இங்கு இடமேயில்லை. ஆனால் நற்காரியங்கள் அனைத்தையும் கொடுத்து அருளுகிற மாபெரும் போஷிப்பாளராகிய அவருக்கு எல்லாவற்றிலும் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நமது காரியங்களிலும் இது சரியாக இருப்பது போன்று, தேவதூதர்களின் காரியங்களிலும் இது சரியான தாகவே உள்ளது. இந்த பிரபஞ்சம் முழுவதிலும் மேன்மைப் பாராட்ட தேவனுடைய எந்த சிருஷ்டிகளுக்கும் ஒன்றுமேயில்லை. தேவனுடைய சிருஷ்டிகள் இப்போது எந்த நிலைகளில் இருக்கி றார்களோ, அது அவர்களால் உண்டானதல்ல. தாழ்மைக் காகவே தேவன் ஒவ்வொரு நிலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார் என்று காணப்படுகின்றது. ஆகவே மேட்டிமைக்கு சிறிதளவாகி லும் இடமேயில்லை.

மேட்டிமையானது கொஞ்சம் சுயநலமும், தற்புகழ்ச்சி யும் மாத்திரம் கொண்டுள்ளதாக இருக்கிறது. மேலும் சுயநலம் என்பது பாவத்தின் இன்னொரு பெயராகும். ஆக பாவமும் சுயநலமும் தெய்வீக குணாம்சத்திற்கும், தெய்வீக திட்டத்திற்கும் முழுவதும் விரோதமாக உள்ளது. ஆக மேட்டிமையுள்ளவனை தேவன் அருவருப்பதற்கு சரியான ஏற்ற காரணங்களாக இவை உள்ளது. தேவனுடைய ஆசீர்வாதங்களை சரியான முறையில் உபயோகிக்காத போது அவர்கள் தேவ தயவையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்கள் மனதளவிலான தங்கள் திறமையையும் தங்கள் சரீர பலத்தில் பெருமை கொண்டும், செல்வத்தின் மீதும் முன்னோர்களைப் பற்றி பெருமை கொண்டும், அதாவது தங்கள் "முன்னோர்கள் குரங்குகளாக இருந்தனர்" என்றும் பெருமையடித்தும் வருகின்றனர். இவைகளில் எதுவானாலும் அனைத்துக்கும் மேட்டிமையே காரணமாகும். அதேசமயம் இது தேவனுக்கு அருவருப்பானதுமாகும்.

## மேட்டிமையின் மிகவும் அருவருக்கப் படக்கூடியத் தன்மை

தெளிவாக நாம் பார்த்தோமேயானால், மேட்டிமையின் மிகவும் அருவருக்கப்படக்கூடிய விதம் எதுவென்றால் ஓர் கூட்டத்தாராக, சபையாக அனைவரும் ஒன்றாக சேர்ந்து மேட்டிமைப்படுதலாகும். அதாவது நாம் அந்த திட்டத்தை ஏற்படுத்தியிருந்தால் நாம் அதில் பெருமை கொள்ளலாம்! அந்த திட்டத்தை தீட்டியவர் அதனை பெருமையாக கண்டு உணர்வது நியாயமானது என்றே நாம் காண்கின்றோம். நம்மில் ஒருவரும் அந்த திட்டத்தையும் ஏற்படுத்தாததை நாம் நினைவிற் கொண்டவர் களாக இருக்க வேண்டும். அந்த தெய்வீக திட்டத் தைக் கண்டுணர சிலாக்கியம் பெற்றவர்களாக, தாழ்மையிலே அதிகமாக நிரப்பப்பட்டவர்களாக உலக முழுவதற்கும் தமது ஆசீர்வாதங்களை அருளிவருகின்ற தேவனுடைய நாமத்தை நாம் அனுதினமும் மகிமைப் படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சத்தியத்தினாலே மேட்டிமைபாராட்டுவதைவிட எந்த வகையிலான மேட்டிமையும் தேவனுடைய பார்வையில் மிகவும் அருவருக்கப்படத்தக்கது என்று நாம் கருதக்கூடாது. சத்தியத்தினாலே மேட்டிமை கொள்வதே தேவனுடைய பார்வையில் மிகவும் அருவருக்கப்படத்தக்கதாகும். யாரேனும் ஒருவர் இதனையே தொடர்ந்து செய்கிறவராக இருப்பாரே யானால் அது அவரை வெளிச்சத்தைவிட்டு புறம்பே தள்ளிவிடவே வழிநடத்தும் என்பது வெளிப்படை. இந்த அடிப்படையான உண்மை காரியமானது சாத்தானின் விஷயத்தில் நன்றாக விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஒரு மேன்மையை அதாவது உயர்ந்த ஸ்தானத்தைப் பற்றி சிந்தித்து தனது இருதயத்திலே மேட்டிமை சிந்தையைப் பிரவேசிக்க அவன் அனுமதித்து அவன் சொல்லியதாவது "**நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்**". இந்த மனமேட்டிமையே அவனை தேவனுக்கு எதிராளியாக ஆக்கினது. (**ஏசா. 14 : 12–17**). எதிராளி, சாத்தான், பிசாசு என்று இவன் வேதவாக்கியங்களில் அறியப்பட்டிருக்கின்றான்.

பெருமையின் ஆவியைக் கொண்டிருக்கும் அனைவரும் "**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது**" (**யாக். 1 : 17**) என்பதை அங்கீகரித்துக் கொள்ள தவறிவிடுகின்றனர். ஆக இந்த எதிராளியின் ஆவியை கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் தேவ ஆவியை உடையவர்களல்ல, இந்த சிந்தை வளரவும் கனியைத்தரவும் அனுமதிக்கப்பட்டால் இறுதியில் அது இரண்டாம் மரணத்திற்குள்ளாகவே வழிநடத்தக் கூடியதாக இருக்கும். தேவனுடைய ஜனங்களுக்கு வரும் சோதனைகளின் தன்மையானது திடுக்கிடக்கூடிய ஒன்றாகும்! ஆனால் நாம் மற்றவர்களை அவர்கள் இருதயத்தில் மேட்டிமை சிந்தை இருக்கிறதா? இல்லையா? என்று நியாயந்தீர்க்கக்கூடாது. இது சில சமயம் சற்று வஞ்சனையுள்ளதாகவும் இருக்கும். ஆயினும் "**பரம அழைப்பிற்கென்று**" ஓடி அதனை பெற்றுக் கொள்ள தவறியவர்கள், "**திரள்கூட்டத்தின்**" அங்கத்தினரான இடத்தை பெற்றுக் கொண்டனர் (**வெளி. 7 : 9–17**). சத்தியத்தில் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டவர்களில் தேவன் எதிர்பார்க்கிற அளவு நமது நடத்தை பொருந்துகிறதாக இல்லை என்பதை நாம் கண்டால் நமது இருதயத்தில் அந்த மேட்டிமையின் சிந்தையை எந்த அளவில் கொண்டிருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அநேகமாக இந்த மேட்டிமை குணமானது சத்தியத்தில் அநேக வருடங்களாக இருக்கிறவர்களிடமே அதிகம் வெளிப்படுகிறதேயல்லாமல் வேறு எங்கும் அதிகம் வெளிப்படவில்லை, சில சமயங்களில் இது சகோதரிகளிடத்திலும் இருக்கிறது. சில சமயங்களில் இவர்கள் தாங்கள் அறிந்தவைகளில் அதிக மேட்டிமையாயும், தங்களுடைய விஷயங்களில் அதிக அகந்தையுள்ளவர்களாயும் தங்களுக்கே எல்லாம் தெரியும் என்று எண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும் சில சமயங்களில் பெருமையின் ஆவி சகோதரர்களிடத்திலும் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் மூப்பர்களாக அமர்த்தப்பட்டிருக்கும்போது தாங்கள் மாத்திரமே சரியாக நடக்கிறவர்களாகவும் மற்றவர்கள் தவறு செய்கிறவர்களாகவே இருப்பதாகவும் எண்ணுவார்கள். சில சமயங்களில் இது சபையாரின் சுதந்திரத்தை தங்களுடைய அதிகாரத்தினால் நீக்கிப்போடவும், தங்களுடைய கைகளிலேயே அதிகாரத்தை எடுத்துக் கொள்ளவும் முயற்சிக்க இது வழி நடத்தும்.

## "உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக"

இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை எப்பொழுதுமே குறிப்பிடும் வேலை எங்களுடையது இல்லை. அது அந்த அந்த சபை சம்பந்தப்பட்ட காரியமாகும். சில காலங்களுக்கு முன்பு யாத்ரீகராக (Pilgrim) இருந்த ஒரு சகோதரர் "**சகோதரர் ரஸல் அவர்களே நாம் திரைக்கு அப்பால் சென்றடையும் போது, மிகவும் சொற்பமானவர்களே தெரிந்தெடுக்கப்பட்ட சபை வகுப்பாரில் ஒரு உன்னதமான இடத்தை பெற்றவர்களாக இருப்பதை எண்ணி நாம் திகைப்படையக் கூடும் என்று நான் சில வேளைகளில் சிந்தித்ததுண்டு**" என்று குறிப்பிட்டார். தேவனுடைய பணியில் ஐக்கியப்பட்டுள்ளவர்களாகிய நாம் நம்மையே மிகவும் உன்னிப்பாக கவனிக்கவும் இது நமக்கு உதவுகிறது. இதில் நாம் மேட்டிமையின் சிந்தையை சிறிய அளவே கண்டுபிடித்தோமேயானாலும் நம்மிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவி மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மோசமான தொற்று வியாதியாக கருதி அதனை முற்றிலும் அழிக்க வேண்டும். நம்மைச் சுற்றியிருக்கிறவர்களில் அப்படிப்பட்டவர்களை நாம் கடினமாக அல்லாது பரிவாக நடத்த வேண்டும். நாம் நமது அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நினைவிற்கொள்ள வேண்டும். "**அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக**" (**யாக். 3 : 1**). சத்தியத்தை தெளிவாகக் கண்டவர்களும், சில தாலந்துகளையும், சந்தர்ப்பங்களையும் உடையவர்களே இவ்விஷயம் சம்பந்தமாக மிகவும் கடுமையான பரீட்சையை அடைவார்கள்.

சமீபத்தில் வகுப்பினை விரிவாக்கம் செய்யும் பணியில் (Class Extention Work) சில பரீட்சைகள் இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம். வகுப்புகளை விரிவாக்கம் செய்யும் சந்தர்ப்பங்களில் அது அனுகூலமற்றவையாக சில சமயங்களில் பலனளித்தன. தங்களைக் குறித்த மிக உயர்ந்த சுய மதிப்பீட்டினை கொண்ட சிலர் தாங்களே அந்த பணியில் செயல்படுகிறவர்களாகவும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தாங்களே கூற வேண்டும் என்று தீர்மானிப்பதாக விரும்புகின்றனர். சில நல்ல சகோதரர்கள்கூட இதனைச் செய்திருக்கலாம்; சிறந்த மனிதர்களில் சிலரும் கூட இப்படி செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யும் போது, அவர்கள் ஞானமாக செயல்படவில்லை என்று நாங்கள் நம்புகிறோம். முதலில் சொன்ன பிரகாரம் இருதயத்தை நியாயந்தீர்ப்பது நமக்கு தகுதியானதல்ல. ஒவ்வொருவருக்கும் தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்கேற்றபடி போதிக்க சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர். இப்படிப்பட்ட நபர் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் தனது சொந்த செலவில் முழுவதுமாக போதிக்கும் ஊழியத்தை செய்யலாம். அவர் தன்னால் முடிந்த அளவில் எல்லாருக்கும் போதிக்கலாம், நல்ல மனிதர்கள் இவ்வாறுதான் செய்து வருகின்றனர். இதனை தடை செய்வதற்கு எவ்வித ஆதாரங்களும் வேதவாக்கியங்களில் இல்லை. ஆயினும் ஒரு கருத்தில் சபையை பலவந்தமாய் அந்த நபர் கீழ்படுத்த முயற்சி செய்வதும் அதாவது சில கருத்தில் சபையாரை அங்கீகரிப்பதும் அதே சபையை வேறொரு கருத்தில் நிராகரிப்பதும், சரியான காரியம் அல்ல. ஒருவேளை சபையார் தெய்வீக சித்தத்தை வெளிப்படுத்துவார்களேயானால், சபையாக அந்த சபையார் என்ன முடிவெடுக்கிறார்களோ அதையே அந்த தனிநபர்கள் ஆட்சேபனையின்றி பூரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

***

# ஜலப்பிரளயத்தில் தெய்வீக நீதி

**Divine Justice in the Flood**

**"ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போனது .............." மத்தேயு 24 : 39 .**

நமது வெளியீடுகளில் இயற்கையின் தூண்டுதல்களே ஜலப்பிரளயத்தினை ஏற்படுத்தினது என்பதையும், இவை எல்லா முறையிலும் நியாயமான காரணங்களைக் கொண்டது என்பதையும், இவை வரலாற்றோடும், புவியியலோடும் முழுமையாக இசைவிணக்கமாக இருப்பதையும் நாம் கண்டறிந்துள்ளோம். இங்கு நாம் ஜலப்பிரளயத்தை ஓர் வித்தியாசமான நிலைபாட்டிலிருந்து ஆராயப் போகிறோம். தேவன் ஏன் இந்த ஜலப்பிரளயத்தை அனுமதித்தார் என்றும், நீதிமானாகிய நோவாவையும் அவனுடைய குடும்பத்தாருமாகிய எட்டுபேரையும் தவிர்த்து, மீதியான மனுக்குலத்தை முற்றிலும் அழித்த ஒழுங்குகளில் தேவன் நீதியாய்ச் செய்ததைப் பற்றியும் நாம் வேதாகமத்திலிருந்து காண்பிக்க முயற்சிக்கிறோம். **(2 பேது. 2 : 4–10).** முதலாவதாக தேவன் ஆதாமோடு செய்த உடன்படிக்கையைக் குறித்து நாம் நினைவிற்கொள்ள வேண்டும். அதாவது ஆதாம் அவனுடைய சிருஷ்டிகருடைய சாயலில் பூரணமானவனாக இருந்தான் என்ற உண்மையின் அடிப்படையில் அவனுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்பட்டது என்பதையும், அவனுடைய சிருஷ்டிகருக்கு தொடர்ந்து கீழ்ப்படிவதின் மூலமாகதான், இந்த ரூபத்தையும், சாயலையும் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்ற நிபந்தனையையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சாத்தான் சர்ப்பத்தினை பிடித்து, அதின் மூலம் நமது ஆதிப் பெற்றோரைப் புசிக்ககூடாது என்று தேவனால் கட்டளையிடப்பட்டிருந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கும்படியாக அவர்களை வழி நடத்தினான், அது முதல் ஓர் சோதனையை, தூண்டுதலை ஏற்படுத்தினான். சகல மிருகங்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாக இருந்ததையும் அது தான் வழக்கமாக சாப்பிடும் உணவில் முன்னேற்றத்தை அடைவதையும், அந்த கனியினால் சர்ப்பத்தின் உயிரோடு இருக்கும் தன்மை விஷத்தினால் பாழாகிப் போகிறதா என தாயான ஏவாள் கண்டறிந்தாள். மிருகங்களைவிட மனுக்குலம் அதிக மேலான ஸ்தானத்தில் இருக்கிறது. உயர்ந்த ஞானமானது தன்னையும் தனது கணவனையும் தேவர்களைப் போன்று ஆக்குமென்றும், ஏவாள் சிந்தித்தாள். அவள் மேலான அறிவுக்காகவும், பெலத்துக்காகவும் தாகமாயிருந்தாள். அவளுக்கும் அவளது மேலான உயர் இலட்சியத்திற்கும் முட்டுக்கட்டையாக தெய்வீக கட்டளை மாத்திரம் இருப்பதாக காணப்பட்டது. ஆகவே அவள் அந்த கனியைப் பறித்து புசித்து, ஆதாமுக்கும் அதனைக் கொடுத்தாள். இங்கு ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஏனென்றால் கீழ்ப்படியாமையைத் தொடர்ந்து நிச்சயமாய் மரணம் நேரிடும் என்று ஆதாம் அறிந்திருந்தான். அப்படியிருந்தும் அவன் தனது மனைவி இல்லாமல் நித்திய காலமாக ஜீவிப்பதைவிட தனது மனைவியோடுகூட மடிந்துப் போவதே நலம் என்று எண்ணி தேவனுக்கு கீழ்படியாமற் போனான்.




இந்த கீழ்படியாமையானது அவர்கள் ஏதேனிலிருந்து வெளியேற்றப்படவும், தேவன் கொடுத்த **"நீ செத்துக் கொண்டே சாவாய்"** என்ற தீர்ப்பின் படிப்படியான செயல்பாடு ஆரம்பிக்கவும் வழிவகுத்தது, அது ஆதாம் அந்த விருட்சத்தின் கனியைப் புசித்த அந்த ஆயிரவருட நாளுக்குள்ளாகவே அவன் மரித்தான். அவனுடைய ஆயுசு நாட்கள் தொளாயிரத்து முப்பது ஆகும். **(2 பேது. 3 : 8).** அவனுடைய சந்ததியும் அவனுடைய மரண நிலைமையையும் மரண தன்மையையுமே சுதந்தரித்துக் கொண்டது. ஆகவே மனுக்குலம் அனைத்தும் தெய்வீக சாபத்தின் மரண தண்டனையின் கீழ் இருப்பதால் இந்த ஆறாயிர வருடங்களாக கல்லறைக்கு, ஹேட்சுக்கு (Hades) போய்க் கொண்டு இருக்கின்றன. ஆகையால் மனுஷீக ஜீவ காலத்தைச் சுருக்கிக் குறைப்பதில் மனுக்குலத்திற்கு எவ்வித அநீதியும் இழைக்கப் படவில்லை; ஏனென்றால் அனுபவிக்கும் வாழ்க்கை நிச்சயம் கொடுக்கப்பட்டதைவிட அதிகமானதே. பதினாறு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏதேன் தோட்டத்தில் மனுக்குலத்திற்கு எதிராக விதிக்கப்பட்ட மரணத் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கு மாத்திரமே இந்த ஜலப்பிரளயமே வந்தது. ஜலப்பிரளயம் உண்டான காரணத்தை பற்றிய வேதாகம விளக்கத்தை சரியான முறையில் கவனித்தோமானால் அது உண்மையில் ஒரு மறைவான ஆசீர்வாதமாக இருப்பதை நாம் காணமுடியும். அக்காலத்தில் மனுக்குலமானது அடிமைத்தனத்திற்குள்ளானது. மனுக்குலத்தினிடத்தில் விசேஷித்த விதமாய் புகுத்தப்பட்ட ஓர் புதிய சந்ததியின் மூலம் மனுக்குலமானது வெகு சீக்கிரத்தில் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கும். இந்த புதிய சந்ததி பிரத்தியேகமாக ஆண்களாகவே இருந்தார்கள் என்றும் மனுஷ குமாரத்திகள் மூலம் பெற்றெடுக்கப்பட்டார்கள் என்றும் வேதாகமம் சொல்லுகின்றது. **"இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்" – "இராட்சதர்கள்" (ஆதி. 6 : 1 – 4)** என்று நாம் வாசிக்கிறோம்.

ஆதாமின் விழுந்து போன சந்ததியால் இந்த தகாதவிதமாய் பிறந்த மனதளவில் மேலானவர்களும் சரீர

பிரகாரமாக பலவான்களானவர்களோடும்கூட திறம்பட சமாளிக்க முடியாமற்போனது. மனுக்குல சந்ததியினரின் மனைவிகள், குமாரத்திகளைக் கொள்ளையிட்டு அவர்களது புதிய எஜமானர் களுக்கு கடின வேலைகளைச் செய்வதற்கு வற்புறுத்தப் பட்டார்கள். மனுக்குலத்தின் ஜீவியமானது ஒரு சுமையாக கடினமான ஒன்றாக இருந்தது. அதோடுமட்டுமல்லாமல் புதிய சந்ததி துஷ்டர்களாகவும், மிருகத்தனமுள்ளவர்களாகவும், மூர்க்கத்தனமுள்ளவர்களாகவும் ஒழுக்கக் கேடுள்ளவர்களாகவும் இருந்தனர். ஆகையால் "**அக்கிரமம் பூமியிலே பெருகினது**" என்று வேதாகமம் கூறுகிறது. இந்த பொதுவான ஒழுக்கச் சீர்கேடுகள் மிகுதியாயின; "**அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதவைகளே**" என நாம் வாசிக்கிறோம். எப்பேற்பட்ட மோசமான குற்றச்சாட்டு! இப்படியான கடுமையான மூர்க்கத்தனமும், விரோதமும் அடிமைத்தனமுமானமுள்ள நிலை முற்றிலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற புத்தியுள்ள ஜீவிகளின் பார்வையில் ஜலப்பிரளயமானது எப்பேற்பட்ட ஒரு இரக்கமாக இருக்கிறது! இந்த சம்பவம் ஆதியாகமத்தில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. (ஆதி. 6 : 1-11). முற்காலத்தில் போதுமான கவனத்துடன் நாம் வேதாகமத்தைப் படித்திருக்க மாட்டோம். ஆகவே இந்த அற்புதமான, இணக்கமான சம்பவத்தையும் சரியான விதத்தில் நாம் பாராட்டியிருக்கவும் மாட்டோம். இடைப்புகுத்தப்பட்ட இராட்சத சந்ததி உருவான விதம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. விடிவெள்ளி, லூசிபர் என அழைக்கப் பட்ட சாத்தான் மகிமையான தூதவர்க்கத்தில் ஓர் உயர்ந்த நிலையை உடையவனாயிருந்தான். "**நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்**" அதாவது ஒரு சுதந்திரமான அரசனாவேன் என்று நீண்ட காலத்திற்கு முன்பே தன் இருதயத்தில் சொன்னான். (ஏசா. 14 : 12-14). இப்படிப்பட்ட அதிக ஆசையின் காரணமாக பாவத்திற்குள் விழுந்தான். பூமியில் தனியான ஒரு அரசாங் கத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த தருணம் இதுவே என்று சாத்தான் எண்ணினான். பூமியின் முதல் ஜோடிக்கு அவன் எஜமானனாக முடியுமானால், அவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களா யிருப்பார்கள் என்றும் அவன் எண்ணினான். சாத்தான் தன்னுடைய மரணமில்லாத சுபாவ நிலையையும், மனிதன் நித்திய ஜீவனுக்காக சிருஷ்டிக்கப்பட்டான் என்பதையும், பாவத்திற்கான தெய்வீகத் தண்டனையாக அவன் மரணத்திற்குப் பாத்திரனாக எண்ணப்படமாட்டான் என்று நினைத்து ஒரு பொருந்தும்படியான தப்பறையை ஏற்படுத்தி அதைப் புகுத்தினான்.

சாபத்தின் கீழ் அவனது மனுக்குலப் பிரஜைகள் படிப்படியாக பலவீனமாக வளர்கிறதை சாத்தான் உணர்ந்த போது, ஒரு புதிய திட்டத்தை வகுத்தான். மனுக்குலத்தை வழிநடத்தவும், உதவவும் தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்த தூதர்களுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. மனுக்குலத்தை வழிநடத்துவதற்கும், உதவுவதற்கும், மனிதனைப் போலவே வாழ்வதற்கும் மனிதனைப் போல சரீரமெடுத்துக் கொள்ளக்கூடிய வல்லமையையும், தேவ தூதர்கள் பெற்றிருந்தபடியால், மனுஷ குமாரத்திகளை தாயாகப்பயன்படுத்தி இனவிருத்தி சக்தியால் ஒரு புதிய சந்ததியைப் பெற்றெடுப்பதின் மூலம் மனுக்குலத்திற்கு சிறந்த முறையில் உதவ முடியும் என்று அவர்களுக்கு சாத்தான் அறிவுரை கூறினான். இது தெய்வீக பிரமாணத்திற்கு மாறானதாக இருப்பதாக காணப்பட்ட போதிலும் சாத்தான் அவனுடைய திசைமாறிப்போன போக்கிற்காக தண்டிக்கப் படவில்லை என்பதால் அங்கீகரிக்கப்பட்டது. சாத்தானைத் தண்டிப்பதிலிருந்து விட்டுவிட்டதின் மூலம், இந்த கலகத்திற்காக சாத்தானைத் தண்டிப்பதற்கு தேவன் இயலாதவராக ஆனாரோ என்று அவர்களால் அனுமானிக்கப்பட்டது. இப்படியாக சாத்தானுக்கு தேவன் தண்டனை கொடுக்காமல் விட்டதால் எல்லா பரிசுத்த தூதர்களையும் கீழ்ப்படியாமைக்கும், விசுவாசக் கேட்டிற்குமான பரீட்சையை அவர்கள் முன் வைத்தார். ஆனால் பரலோகத்தின் தூதர்கள் அனைவரும் தேவனுக்கு இசைவாக எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள் என நாம் அறிகிறோம். அவர்களுக்கான பரீட்சையின் நோக்கமாக அனுமதிக்கப்பட்டிருந்த சோதனையில் அவர்கள் தங்களைக் காத்துக் கொண்டார்கள். இந்த பரீட்சை அநேக நூற்றாண்டுகள் தொடர்ந்தது என்று பாட பகுதியிலிருந்து நாம் அறியலாம். தவறான ஐக்கியத்தின் மூலம் பிறந்த பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கவில்லை. அவர்கள் ஆண்களாகவும், இராட்சதர்களாக வும், பலவான்களாகவும் இருந்தார்கள். அக்காலத்தில் மிகவும் அரிதாகவே மனுக்குலத்தினர் நூறு வயதிற்கு முன்பு புருஷத்துவத்தை அடைந்தனர். "**தேவகுமாரர் (தேவதூதர்கள்) மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தர்யமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்....... தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.**" இவ்வாறு ஒரு புதிய, அங்கீகரிக்கப்படாத சந்ததி மனுக்குலத்திற்குள் வந்தது ஆதியாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட காலத்தில் இப்படிப்பட்ட மிருகத்தனமான பலவான்கள் ஆதாமின் சந்ததியை அடிமைப்படுத்தியும், துன்புறுத்தியும், அக்கிரமத்தினால் பூமியை நிரப்பினார்கள். இவ்வாறு தெய்வீக சித்தம், மற்றும் பிரமாணத்திற்கு விரோதமாகப் பிறந்த இவர்கள் பூமியில் ஜீவிப்பதற்கான எந்த விதமான உரிமையையும் பெற்றிருக்கவில்லை. இயேசு ஆதாமுக்காகவும், அவனது சந்ததிக்காகவும் மாத்திரமே மரித்த காரணத்தினால், இயேசுவின் மீட்பின் வேலைக்குள் இந்த புதிய சந்ததி உட்பட்டிருக்க முடியாது. "**ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**" (1 கொரி. 15 : 22). அவனவன் தன் தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான். சபையானது முதலாம் உயிர்த்தெழு தலில் உயிர்த்தெழும். ஆதாமின் சந்ததிக்கும் மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கை இருக்கிறது. இது மரண நித்திரையிலிருந்து விழித்தெழும் நம்பிக்கையை மாத்திரம் அர்த்தப்படுத்தாமல், அவர்கள் விருப்பமுடையவர்களாயிருந்தால் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும், இழந்து போனதைத் திரும்பப்பெறும் நம்பிக்கையையும் பழைய நிலைக்குத் திரும்பும் நிலையையும் அர்த்தப்படுத்துகிறது. அவர்கள் விருப்பமுள்ளவர் களாயிருந்தால் மானிட பூரண நிலையையும், மாம்சத்தில் தேவனுடைய சாயலையும் அடைவார்கள். இந்த நம்பிக்கை முதலாவதாக ஆபிரகாமின் வித்துக்குள் பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்ற தேவனுடைய

கிருபையான வாக்குத்தத்தத்தின்மேல் நிலைக்கொண்டிருக்கிறது. (ஆதி. 22 : 17, 19). இந்த நம்பிக்கையானது இரண்டாவதாக ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தின் தலையாக இயேசு இருக்கிறார் என்பதும், சபையானது அந்த வித்தின் அங்கத்தினர்கள் என்பதும், தேவனுடைய அந்த தெரிந்தெடுப்பு இப்போது நிறைவடைந்து மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் வேதாகமத்தில் உறுதி செய்வதில் நிலை கொண்டிருக்கிறது. மேசியாவின் இராஜ்யத்தில் இந்த உன்னத ஆவிக்குரிய "வித்தானது" முன் குறிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நிறைவேற்றுவார்கள். பரி. பவுல் இதை முக்கியத்துவப்படுத்திக் கூறுகையில்: "**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்.**" என்றும் "**உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்**" என்று ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தையும் தெரிவிக்கிறார். (ஆதி. 22 : 18; கலா. 3 : 29, 16).

சம்பவங்களை நாம் ஆராய்ந்தால் நமக்குக் காட்டப்பட்டுள்ள தெய்வீக பொறுமையை குறித்து நாம் வியப்படைகிறோம். தேவன் ஒருவரும் கெட்டுப்போகும்படி விரும்புகிறதில்லை என்ற பரி. பேதுருவின் வார்த்தைகளால் நாம் ஞாபகப்படுத்தப்படுகிறோம். தேவன் நமது முதல் பெற்றோரை அழித்து மிகவும் எளிதாக மற்றொரு ஜோடியை உருவாக்கியிருக்க முடியுமே! சோதனையை ஏற்படுத்தாதபடி மிகவும் எளிதாக அவர் சாத்தானை தடுத்திருக்கவும் முடியுமே! கீழ்ப்படியாமையின் மார்க்கத்திற்கு எதிராக தூதர்களை மிகவும் எளிதாக தடுத்திருக்கவும் முடியுமே! தேவைப்பட்டால் எந்த நேரத்திலும் அவருடைய வல்லமையை அவர்களுக்குப் பிரயோகப்படுத்தியிருக்கவும் முடியுமே!


தெய்வீக குணாம்சம், மற்றும் செயல்பாடுகளின் பொதுவான நியமங்களை இப்படிப்பட்ட சம்பவங்கள் நமக்கு விளக்குகின்றன. வானத்திலும், பூமியிலும் பொல்லாதவர்கள் நிறைந்திருப்பதை தேவன் விரும்புகிறதில்லை. தேவன் தூதர்களையும், மனிதர்களையும், வேறுப்பட்ட நிலைகளில் அவருடைய சொந்த சாயலின்படியும், ரூபத்தின்படியும் சிருஷ்டித்தார். தங்களுடைய சொந்த நிலையை அவர்கள் காத்துக் கொள்ள வேண்டும் என்றும், அவருடைய ஞானம், நீதி, அன்பு, வல்லமையில் அன்பினால் உண்மையோடு நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்பினார். மேலும் அவருடைய இராஜ்யம் முழுவதும் எந்த ஊழியக்காரரானாலும், எந்த பிள்ளைகளானாலும், பயத்தின் காரணத்தினாலோ, அறியாமையின் காரணத்தினாலோ, வெறுமனே கீழ்ப்படிவதை அவர் விரும்புகிறதில்லை. இது சம்பந்தமான பரலோகப் பிதாவினுடைய குணாதிசயத்திற்கு இயேசுவினுடைய வார்த்தைகள் நமக்குத் திறவுகோலாக இருக்கிறது. தேவன், தம்மை தொழுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் என்று இயேசு கூறுகிறார். (யோவா. 4 : 23).

பாவமானது உலகில் பிரவேசிப்பதற்கு முன்பு உண்மையில் தேவன் ஒரு மகிமையான இராஜ்யத்தை உடையவராயிருந்தார். இருந்தாலும் சாத்தானுடைய விசுவாச துரோக ஆதிக்கத்தின் எந்த பரவுதலையும் அவனை அழிப்பதின் மூலம் தடுத்திருக்கவோ அல்லது கீழ்ப்படிதலுக்குள் அவனைக் கட்டாயப்படுத்தி ஒரு அடிமையாக்கியிருக்கவோ அவரால் முடிந்திருக்கும். ஆனால் இப்படிப்பட்டவைகளை அவர் விரும்புகிறதில்லையே! தேவன் அவருடைய அரசாங்கம் சம்பந்தமாகவும், அவருடைய பிரஜைகள் அனைவருக்காகவும், மிக உயர்ந்த நோக்கங்களை வைத்திருக்கிறார் என்பது மிகவும் தெளிவாக வெளிப்படையாயிருக்கிறது. அவருடைய கிரியைகள் அனைத்தும் பூரணமானவைகள். மேலும் அவர் சிருஷ்டித்த அவருடைய ஞானமுள்ள சிருஷ்டிகள் அதின் பூரணத்திலிருந்து விலகிச் செல்வதற்கு அதை தேவன் அனுமதிக்கமாட்டார். ஆகையால் பூரணத்திலிருந்து சற்றே விலகியிருக்கிற எதுவானாலும் அது கீழ்ப்படியாமையின் விளைவாகத்தான் இருக்கும். கீழ்ப்படியாதவர்கள் அழிக்கப்படுவார்கள் என்பது மாற்றப்பட முடியாத பிரமாணமாயிருக்கிறது. நீதியை அன்புகூர கற்றுக்கொள்ளாமலும், அநீதியை வெறுக்காமலும் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் நித்திய ஜீவனுக்குத் தகுதியற்றவர் களாக எண்ணப்பட்டு "**ஜனங்கள் மத்தியிலிராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள்.**" (அப். 3 : 23).

## மனிதனின் அனுபவங்கள் ஒரு பாடமே

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருந்த அந்த நிலையில் சோதனை ஏற்பட்டால் அதின் பலனாக பாவம் ஏற்படும் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார். அது மாத்திரமல்ல இந்த சோதனை யைக் குறித்து எவ்வித எச்சரிப்பும் செய்யவில்லை. அதே சமயத்தில் கீழ்ப்படியாமைக்கு எவ்வித மன்னிப்பும் கொடுக்க வில்லை; அதனை அனுமதிக்க அவர் நிர்ணயித்திருந்தார். இந்த அனுமதியானது நித்தியமானது என்று சிலர் எண்ணலாம். ஆனால் வேத வாக்கியங்கள் இதற்கு மாறாக நமக்கு உறுதியளிக்கின்றன. ஆறாயிரம் வருடங்களாக பாவமும், மரணமும் ஆட்சி செய்ய அனுமதிப்பதற்கு அவர் தீர்மானித் திருந்தார். பின்பு மேசியாவின் இராஜ்யத்தைக் கொண்டு வருவதின் மூலம் பாவத்தையும், மரணத்தையும் நீக்குவதற்கும், அந்த இராஜ்யத்தை விரும்புகிற, கீழ்ப்படிகிறவர்களை மானிட பூரணத்திற்கு உயர்த்துவதற்கும், அதை விரும்பாத, கீழ்ப்படியாதவர்களை இரண்டாம் மரணத்தினால் அழிப்பதற்கும் அவர் தீர்மானித்திருக்கிறார். அவருடைய குமாரனை அனுப்புவது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மனுக்குல மீட்புக்காக கீழ்ப்படிதலுள்ள ஒருவரின் பலியின் மரணம் அப்போது தேவைப்படும் என்று அறிந்தவராய் அவர் மரண தண்டனையை மனுக்குலத்தின்மேல் வைத்தார். மேலும் மீட்கும் பொருளாக, மனிதனுடைய உத்திரவாதியாவதற்கு மகிழ்ச்சி யுடனும், விருப்பத்துடனும், இருக்கும் ஒரு மீட்பரை தாம் அருளிச்செய்ய வேண்டும் என்பதை முன்னமே திட்டம் பண்ணியிருந்தார். தீமை அனுமதிக்கப்பட்டதின் மூலமே தேவனுடைய அன்பு வெளிப்படுவதையும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது. மற்றபடி இதை புரிந்துகொள்வது கடினமாகவே இருக்கும். சுமத்தப்பட்ட மரண தண்டனை இந்நாள் வரைக்கும் நீடித்திருக்கிறது என்பது தேவனுடைய நீதியானது. அதனுடைய தண்டனையில் உறுதியாக இருப்பதை விளங்கப் பண்ணுகிறது. மரித்தோரை மறுபடியும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் கொண்டுவருவதின் மூலம் தேவனுடைய வல்லமை விவரிக்கப்படுகிறது. தேவனுடைய திட்டம் முழுவதும்

செயல்படுத்தப்பட்டு முடியும்போது அது முழுவதும் தேவனுடைய ஞானம் இதைச் செய்தது என்பதை மனிதர்களும், தூதர்களும் அறிந்து கொள்ளும் விதமாக விவரிக்கும்; இல்லாவிடில் அவரது ஞானம் அறியப்படாமலே போகும். பாவமும், மரணமும் ஆட்சி செய்ய தற்காலிகமாகவே அனுமதித்து அதனைச் செய்தார்.



*நாம் சுயாதீனமுள்ளவர்களாக சிருஷ்டிக்கப்பட்டோம். தேவனுக்கு இயந்திர மனிதர்கள் தேவையில்லை.*

பாவம் அனுமதிக்கப்பட்டதின் மூலம் கிறிஸ்தவ யுகத்தின் போது ஒரு சபை தெரிந்தெடுப்புக்கான விசேஷ அழைப்பு என்ற மற்றொரு காரியம் ஏற்பட சாத்தியமாயிற்று. இந்த யுகம் முழுவதும் தெரிந்தெடுக்கப்பட்ட சபை ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறது என்று வேதாகமம் கூறுகிறது. அவர்கள் தங்கள் எஜமானரைப் பின்பற்ற வேண்டும் என்ற தங்களது உடன்படிக்கையில் உண்மையுள்ளவர் களாயிருந்தால் ஆவி ஜீவிகளாக சிருஷ்டிக்கப் படுவார்கள் என்றும் உயிர்த்தெழுதலில் நிச்சயமாக ஆவியினால் பிறப்பார்கள் என்றும் இது அர்த்தப்படுத்துகிறது. "**மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது**" (1 கொரி. 15 : 50). ஒரு மீட்பர் தேவையானபடியால் லோகாஸ் பரலோக சுபாவத்தை விட்டு மனிதனாக வந்து அவருடைய அன்பு மற்றும் உண்மைத் துவத்தை மரணபரியந்தம் கீழ்படிந்ததின் மூலம், அதாவது "**சிலுவையின் மரணபரியந்தம்**" கீழ்ப்படிந்ததின் மூலம் வெளிப்படுத்தினார். (பிலி. 2 : 8). மேலும் இந்த கீழ்ப்படிதலின் மகாபலியானது ஆதாமுக்காகவும், அவனுடைய சந்ததிக்காகவும் மீட்கும் பொருளாக மாத்திரம் ஏற்படுத்தப்படாமல், பரலோகப் பிதாவானவர் அவருடைய குமாரனை தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்களுக்கும் மேலாக அவருடைய வலது பாரிசத்திற்கு தெய்வீக நிலைக்கு உயர்த்துவதற்கும் கூட அடிப்படையாக இருந்தது. (யோவா. 5 : 26). இது போலவே சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாக உயர்த்துவதற்காகவும், அவருடைய இராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாகவும், தெய்வீக சுபாவத்தில் அவரோடு பங்குகொள்வதும், பாவம் அனுமதிக்கப் பட்டதின் காரணமாகவே சாத்தியமாகிறது. இயேசுவின் மனச்சார்பைப் போல அதே மனச்சார்போடு இருக்கிற, விழுந்து போன மனுக்குலத்தின் அங்கத்தினர்களை அவர் மூலமாய் நீதிமான்களாக்கி பரிசுத்தமாக்கி, கிறிஸ்துவின் சரீர அங்கத் தினர்களாவதற்கு தங்களுடைய ஜீவியங்களை பலியாக அர்ப்பணித்து, அவருடன் பாடுபட்டு, பின்னர் அவரோடுகூட அவருடைய இராஜ்யத்தில் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும், அவருடன் அரசாட்சி செய்ய பாத்திரவான் களாகும்படி இந்த விழுந்துபோன சந்ததியின் அங்கத்தினர்களை பரமபிதா நீதியாய் செயல்படுத்துகிறார். (ரோம. 8 : 17; 2 தீமோ. 2 : 11, 12;வெளி. 20 : 6; ரோம. 2 : 7; 2 பேது. 1 : 4; 1 கொரி. 15 : 42-44, 53).

"ஞானத்திலும், நீதியிலும், அன்பிலும், வல்லமை யிலும் எல்லையற்ற எப்பேற்பட்ட தேவன்!" நிச்சயமாக அவரைப் பற்றி அறிவதே நித்திய ஜீவன்! தேவன் தம்முடைய குமாரனுக்காகவும், சபைக்காகவும் இவ்விதமாக வகுத்திருக்கிறார் என்றும், இந்த தெரிந்தெடுப்பின் பாடங்களையும், விசுவாசப் பரீட்சைகளையும், மற்றவர்களுக்குக் கொடுப்பது அவசியம் என்று அவர் கருதியிருக்க வேண்டும் என்றும் இந்த வேலையை இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அதில் ஏதேனும் ஆச்சரியமிருக்கிறதா? மனுக்குலத்திற்காக சபையானது சில வேலைகள் செய்ய வேண்டும் என்று அவர் தீர்மானித்த வேலை சம்பந்தமாக, மீட்பரானவர் தாமே மனுக்குலத் திற்காக தேவனுடைய காரியங்களில் கருணை யுள்ள உண்மையுள்ள பிரதான ஆசாரியனாக இருக்கும் பொருட்டு, அவருக்குப் பாடுகளின் மூலமாக அனுபவங்கள் கொடுக்கப்பட்டது; சபையின் வேலை சம்பந்தமாக பார்க்கும் போது இதில் ஏதேனும் ஆச்சரியமிருக்கிறதா? நாம் வேதாகமத்தை நன்றாகப் புரிந்து கொண்டோ மானால், முடிவாக உலகம் முழுவதுக்கும் இயேசுவின் பலியின் மூலமாக மீட்பை தேவன் உண்டு பண்ணினதைத் தெளிவாக நாம் கண்டுகொள்ள முடியும். ஆதாமின் சந்ததி தனித்தனியாகத் தண்டனைக்கு உட்பட வில்லை. மாறாக தகப்பனாகிய ஆதாம் என்ற, ஒரே மனிதனுக்குள் பாவத்தினி மித்தம் தண்டிக்கப்பட்டனர். அதுபோல மொத்த சந்ததியும் ஒரே மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் – அதாவது "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள்**" மீட்கப்படுவார்கள். (1 தீமோ. 2 : 5, 6; எபி. 2 : 9; 1 யோவா 2 : 2).

தேவன் எபிரேயர்களைத் தவிர மனுக்குலத்தின் மற்றவர்களைக் கடந்த நான்காயிரம் (4000) ஆண்டுகளாக தொடர்பு கொள்ளவில்லை என்பதால், அவர் யூதர்களை மட்டும்தான் நேசித்தார் என்றோ அல்லது இந்த இஸ்ரவேலர்கள் மட்டுமே மீட்பின் வேலையில் பங்கெடுத்து முடிவாக தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்றோ அர்த்தமில்லை. மாறாக, தேவன் பொதுவாக உலகிற்கு செய்யவிருக்கும் தமது வேலையில், யூதர்களிலிருந்து சில உண்மையுள்ள நபர்களைத் தெரிந் தெடுத்து, தமது பிற்கால வேலையில் பங்குகொள்ளும்படி செய்வதே அவர் அவர்களோடு விசேஷமான முறையில் செய்த உடன்படிக்கையாகும். இந்த வேலைக்காக எபிரேயர்களிலிருந்து ஊழியக்காரர்களாகிய ஒரு வகுப்பை தெரிந்தெடுப்பதற்கும், பின்னர் சுவிசேஷ யுகத்தில் அனைத்து மனுக்குலத்திலிருந்தும் மற்றொரு வகுப்பைத் தெரிந்தெடுப்பதற்கும் நீண்ட காலம் – அதாவது ஆறாயிரம் வருடங்கள் தேவைப்பட்டது. முடிவாக ஆதாமின் சந்ததிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. இதற்கு விரோதமான வாதம் ஏதும் இல்லை. தெய்வீக இரக்கத்தை வெளிக்காட்டுவதற்கு இந்த உபகரணங்கள் ஆயத்தமாவதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்வது எதனைக் காட்டுகிறதென்றால் தேவ ஏற்பாட்டின் உன்னதமும் பூரணத்துவமும் மனுக்குல சந்ததி முழுவதிற்கும் செயல்பட வேண்டும் என்பதால்தான். நாம் அவருடைய வார்த்தையைப் படிப்பதிலும், அன்பிலும், கிருபையிலும், அறிவிலும் வளர்வதிலும் அவருடைய ஆச்சரியமான ஏற்பாட்டில் தேவனுடைய கிருபையில் நாம் எதில் பங்குள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளும்படிக்கும், இதைப் படிப்பதின் மூலம் மகிமையான சிலாக்கியங்களை நாம் பயன்படுத்திக் கொள்வோமாக. நாம் வெளிச்சத்திற்குரிய வர்களாக நடந்து கொண்டு தமது சொந்த இரத்தத்தால் நம்மைச் சம்பாதித்த அவருக்குள் களிகூர்வோமாக. ***

# ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது

**1 ராஜா. 8 : 54–63**

இந்த பாடத்தின் முதல் வசனமானது சாலோமோனுடைய ஜெபத்திடம் நோக்கி நம்முடைய கவனத்தை இழுக்கிறது. அது தேவனுக்கும் அவருடைய ஆராதனைக்கும் ஆலயத்தை பிரதிஷ்டை செய்வது சம்பந்தமான ஜெபமாகும்.



தேவனிடம் கொண்டுள்ள விருப்பத்திற்கும் ஞானத்தின் பாதையில் நடப்பதில் அவனுக்கிருந்த விருப்பத்திற்கும் சாட்சி பகருகின்றன. அது மாத்திரமல்லாமல், இப்போது அதனுடைய கட்டுமானம் முடிக்கப்பட்டு அவனுடைய ஜெபமும் அதன் பிரதிஷ்டையும் கூட அதற்கு சாட்சியாக இருக்கின்றன. தேவனிடம் அவன் கொண்டுள்ள விசுவாசமும் அவனுடைய இருதயத் தின் தாழ்மையும் முழுவதுமாக எங்கிலும் வெளிப்படுத்தப்படுகிறது. அவைகள் அவனுடைய ஜெபத்தின் வார்த்தைகளில் மட்டுமல்லாது, ஜனங்கள் பார்க்கையில் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிடும் அவனுடைய மனப்பான்மையிலும் வெளிப்படுகின்றன. இது மிக அழகான ஓர் காட்சியாகும். அது நல்ல விருப்பங்களை கொண்டிருப்பது மட்டுமல்லாது அவ்விருப்பங்கள் முழுவதுமாக நம்முடைய நேரம், சிந்தனை மற்றும் கவனம் ஆகியவற்றில் இடம் பெற்றிருக்க அவைகளை அனுமதிப்பதும்கூட இன்றியமையாதது என்பதை நமக்கு அறிவுறுத்தவும் செய்கின்றது. கர்த்தருக்கான இந்த மகா ஆலயத்தின் கட்டுமானத்தின் எல்லா வேலைகளிலும் அதனுடைய கட்டுமானத்தின் பிரதான மேற்பார்வையாளராக சாலமோன் வைக்கப்பட்டான் எனவும், ஆகவே அவன் அதில் தீவிரமாக ஈடுபட்டான் எனவும் நாம் அறியலாம். மேலும் இந்த கால கட்டத்தில்தான் அவன் ஒரு மிகச்சிறந்த ஆட்சியாளனாகவும், ஆண்டவருக்கு பயபக்தி யாகவும் நடந்து கொண்டிருந்தான் எனவும் நாம் நியாயமாகக் கருதலாம். அவனுடைய நேரத்தை எப்போதும் தேவ மகிமைக்கான வேலைகளிலும் அல்லது தேவ ஜனங்களின் நன்மைக்கான வேலைகளிலும் நன்கு செலவழித்தபடியால் அது அவனுக்கு நன்மையானதாக இருந்திருக்கும். இந்த மகா வேலையானது செய்து முடிக்கப்பட்ட பின்பு அவன் சுயதிருப்திக்கேதுவாக தன் சிந்தனைகளை சுயநலமாக திருப்பத் தொடங்கி னான். அவனால் கூறப்பட்ட நீதிமொழிகளின் கூற்றின்படி அது முடிவில் ஞானத்திற்கு தூரமாயிருக்கிற தவறான பாதைக்கு அவனை வழிநடத்தியது.

1 ராஜா. 8 : 55-61 வரையுள்ள வசனங்கள் ஆசீர்வாதமும் புத்திமதியும் சேர்ந்த ஓர் சொற்பொழிவாகும். அது சாலமோன் ஜனங்களுக்கு ஆற்றிய சொற்பொழிவாகும். இதில், அவனுடைய ஜெபத்தில் இருக்கிறதுபோல, சாலமோன் மிகுந்த தன்னடக்கத்தையும் அதேபோன்று தேவனுக்காகவும் மற்றும் அவருடைய நீதிக்காகவும் வைராக்கியத்தையும் காண்பிக்கின்றான். மேலும் அவன் புத்திமதி கூறுகையில் எல்லா ஜனங்களோடுகூட தன்னையும் இணைத்து கொள்கிறான். "**நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும் இருப்பாராக**" என்றான்.

அர்ப்பணிப்புக்கான ஜெபம் மற்றும் தகன பலிகளை செலுத்திய பின்பு தேவன் ஆலயத்தை அங்கீகரித்து, மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் கிருபாசனத்தின் மீது செக்கினா (shekinah) மகிமையை பிரகாசிக்கச் செய்து தன்னுடைய அங்கீகரிப்பை வெளிப்படுத்தினார். இஸ்ரவேலரோடுகூட உள்ள தேவ பிரசன்னம் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து (தற்காலிகமான, நகரும் ஆராதனை ஸ்தலத்திலிருந்து) ஆலயத்திற்கு இடம் மாறியது. ஆலயமே தேவனுடைய பிரசன்னத்தின் நிரந்திர இடமாகி அவருடைய ஜனங்களில் மையம் கொண்டது. இதனுடைய நிழல் அடையாள அம்சங்கள் எல்லாராலும் எளிதில் உய்த்துணரப்படும். ஆசரிப்பு கூடாரத்திலிருக்கிற செக்கினா (shekinah) மகிமையானது இஸ்ரவேலர்களுடைய வனாந்திர பிரயாணத்திலும் கஷ்டங்களிலும் துணையாக போகின்ற அவர்களுடைய தேவ பிரசன்னத்தை அடையாளப்படுத்துகிறது; அதுபோல இப்போது சுவிசேஷ யுக காலத்தில் சபையினுடைய தற்காலிகமான நிலைமையில் அல்லது ஆசரிப்பு கூடார நிலைமையில் சபையோடு இருக்கும் தேவ பிரசன்னம் அதன் நிறைவேறுதலாக இருக்கிறது; ஆகவே கட்டிமுடிக்கப்பட்ட ஆலயத்தின் மீதிருக்கும் தேவ மகிமையின் பிரசன்னமானது சபையின் ஒன்றாக கூட்டிச்சேர்க்கப்பட்ட அதனுடைய ஜீவனுள்ள கற்களோடு உள்ள சபையின் மகிமையைக் குறிக்கிறது. இப்போது அதனுடைய பூரணத்திற்கு வந்து இருக்கிறது. ஆசரிப்பு கூடாரத்தின் மகிமையானது ஆலயத்தினுடைய மகா மகிமையின் முன்னனுபவமாகவும் எடுத்து காட்டாகவும் மாத்திரம் இருந்தது. அதுபோல சபையின் அனுபவத்திலும், சுவிசேஷ யுகத்தில் சபையுடனான பரிசுத்த ஆவியின் வாசஞ்செய்வதானது இப்போது நிறைவடைந்த மற்றும் மகிமையடைந்த தேவனுடைய சபையால் இன்பமனுபவிக்கப்படும் ஆவியினுடைய முழுமையுடன் ஒப்பிடும் போது "ஆவியின் முதற்கனிகளாக" மட்டுமே இருந்தது.

***

# நெப்போலியன்

**தானி. 11 : 35–45**

**பாகம் 3**

## வாட்டர்லூவில் நடந்த யுத்தம் சூழ்நிலையை மாற்றியது

வாட்ர்லூ என்ற இடத்தில் நடந்த யுத்தத்தின் தோல்விக்குப் பின்னர் பரிசுத்த நேச நாடுகளின் கூட்டம் வியன்னா மகா சபையாகக் கூட்டப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சியினால் முதலாவது சாம்ராஜ்யத்தினால் நிலைநிறுத்தப்பட்ட கொள்கைகளான சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தை அனுமதிக்கும் சட்டங்கள் பின்வாங்கப்பட்டு 1830 வரை செயல்படுத்தப்படவில்லை. வாட்டர்லூ யுத்தத்திற்குப் பின்பு 1815-ல் புருஷ்யா சுதந்திரத்தின் சட்டங்களை மறுத்தது. போப்பு மார்க்க அரசாங்கங்களால் யூதர்கள் மோசமான பின்னடைவுகளை அடைந்து துன்பத்தை அடைந்தார்கள். பயஸ் VII என்ற போப்பு தான் நெப்போலியனால் சிறுமைபடுத்தப்பட்டதினால் தன்னுடைய ஆதிக்கத்தின் பகுதியில் இருந்த யூதர்களைப் பழிவாங்க முடிவு செய்தார் என்பது நிச்சயமாகக் காணப்பட்டது. யூதர்களை மறுபடியும் உருவாக்கப் பட்ட சேரிகளில் குடியிருக்க வைத்ததோடு திருப்தி அடையாமல் மறுபடியும் அவர்களை "மஞ்சள் அடையாளச் சின்னத்தை" அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினான். சார்டினியாவிலும் யூதர்கள் மறுபடியும் சேரிக்குள் தள்ளப் பட்டார்கள், அவர்கள் ஜெப ஆலயங்களைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. பல காலம் சென்ற பின் ஐரோப்பிய தேசங்கள் 1824 முதல் 1867 வரை யூதர்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தன; குறிப்பிடத்தக்க விதமாக ஹாலந்து 1830-லும்; ஸ்வீடன் 1834-லும், ஸ்விட்சர்லாந்து 1838-லும் யூதர்களை ஏற்றுக் கொண்டன. இங்கிலாந்தில் இது மிகவும் விசித்திரமாக இருந்தது. லார்ட் லயனல் ராத் சைல்டு ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு தான் 1858-ல் பார்லிமெண்டில் தன்னுடைய இடத்தைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டார். 1808-ல் பிரான்சில் இயற்றப்பட்ட சட்டங்கள் இன்றளவும் நடைமுறையில் உள்ளன என்பதை அறியும் போது சுவாரசியமாக இருக்கிறது. கசப்பான திருப்புமுனையாக சரித்திரத்தில் நெப்போலியனுடைய தோல்வியானது யூத இளைஞர்களை அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியாமல் தடுத்து நிறுத்தி அவர்களை முழுமையான ஏமாற்றத்திலும் கவலையிலும் ஆழ்த்தியது. யூதர்கள் நெப்போலியனுடன் இணைந்து எதிர்த்து நின்றது யூத சரித்திரத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. முதல் தடவையாக நவீன ஆட்சி நிபுணர் யூத பிரச்சனையை சர்வதேச பன்னாட்டு அரசியலின் அடிப்படைப் பிரச்சனையாக பார்த்தார். நெப்போலியன் முன்பு இருந்த எந்த தலைவர்களைக் காட்டிலும் யூதர்களுக்கு அதிகமான பாதுகாப்பையும் மத சுதந்திரத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தேசங்களில் அதிகமாகக் கொடுத்தார். அவருடைய கொள்கைகளில் எந்த விதமான அரசியல் உள்நோக்கமும் இருக்கவில்லை, ஏனென்றால் அப்பொழுது பிரான்சில் குடி இருந்த யூதர்கள் 40,000-க்கு மேல் இருக்கவில்லை. பிரான்சிலும் சாம்ராஜ்யம் முழுவதிலும் இருந்த யூதர்கள், இதனை மனுக்குலத்திடம் காட்டப்படும் நெப்போலி யனின் மனிதாபிமானமாகவும் மற்ற தேசத்தார்களிடமும் மதத்தார்களிடமும் அவர் கொண்டுள்ள மரியாதையாகவும் ஏற்றுக் கொண்டனர். யூதர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட சமத்துவத்திற்காகவும் மத சுதந்திரத்திற்காகவும் மிகவும் நன்றி யறிதலுள்ளவர்களாக இருந்தனர். அவருக்காக விசேஷித்த ஜெபங்களை ஏறெடுத்தனர். நெப்போலியனுடைய கட்டுப் பாட்டின் கீழ் இருந்த தேசங்களிலுள்ள ஒவ்வொரு யூத ஜெப ஆலயங்களிலுமுள்ள ஜெபப் புஸ்தகங்களில் இந்த ஜெபமானது சேர்க்கப்பட்டது. இதன் விளைவாக இந்த ஜெப ஆலயங்களின் ஜெபங்களில் கலந்து கொண்ட எல்லா யூதர்களும் இந்த ஜெபத்தை மனப்பாடம் செய்தனர்.

### இணைப்பு – 1

பிரான்ஸ் மற்றும் இத்தாலி குடிமக்களால் நம்முடைய எஜமானருடைய சேனைக்காகவும் சக்கரவர்த்தியும் ராஜாவுமாகிய மகா நெப்போலியனுடைய வெற்றிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் செய்யப்படும் ஜெபம். (அவருடைய மகிமை பிரகாசிக்கக்கடவது). இது கேஸ்வன் மாதத்தில் 5567-ம் ஆண்டில் (1807) இயற்றப்பட்டது. சங். 20, 21, 27, 147 அதிகாரங்கள்.

"வானம் பூமி மற்றும் அதன் குடியிருப்புகளின் சிருஷ்டிகரே, நான் உம்மிடத்தில் மன்றாடுகிறேன். ஜாதிகளையும் அதினதின் பாஷைகளின்படியும் பூமியின் எல்லைகளையும் வரம்புகளையும் நீரே ஸ்தாபித்தீர். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த இடத்தில் சமாதானமாக வாழ அவர்களுடைய இராஜாக்கள் நீதியாகவும், நியாயமாகவும், நேர்மை தவறாமலும் ஜனங்களை வழிநடத்தி ஆளும்படி வல்லமையின் செங்கோலை அவர்கள் கையிலே கொடுத்தீர். வல்லமையும் மிகுந்த ஆச்சரியமான திறமையுமுள்ள மனிதனாகிய மகா நெப்போலியன் பிரான்ஸ் மற்றும் இத்தாலி தேசங்களின் சிங்காசனத்தின் மேல் உட்காருவதற்காக, அவர் தலையில் உம்முடைய கரத்தின் மகிமையும், நேர்த்தியும் ஊற்றப்பட்டிருப்பது எங்களுக்கு எவ்வளவு நன்மையானது. எத்தகைய ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள் நாங்கள். உண்மை யாயும் ஞானமுள்ள இருதயத்தோடும் தன்னுடைய ஜனங்களை மேய்ப்பதற்கு தகுதியும் திறமையும், கனத்தையும் ஆளுகையும் யோக்கியதையும் உடைய வேறொருவர் உண்டோ? தேவரீர் நீர் தாமே உம்முடைய ஆச்சரியமான இரக்கத்தை அவருக்குத் தந்தருளினீர். பூமியிலுள்ள மற்ற ராஜாக்கள் யுத்தத்திற்கு அவரை நெருங்கியபொழுது, நீர்தாமே அவரை யுத்த நாளில் பாதுகாத்தீர், அவரை எதிர்த்து நின்றவர்கள்அவரிடம் பணிந்து அவரிடமிருந்து சமாதானத்தை நாடும் அளவுக்கு அவரைக் காத்தீர். அன்பின் ஆவியுடன் அவர்களிடம் அவர் சமாதானத்தின் வார்த்தைகளைப் பேசினார், ராஜாக்கள் அவருடன் செய்த தங்களுடைய உடன்படிக்கையை மீறும்படிக்கும், சமாதானத்தை நீக்கி இரத்தஞ்சிந்தும் யுத்தத்திற்காக இப்பொழுது ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவருக்கு எதிராகவும் அவரைப் போற்றுகிறவர்களுக்கு எதிராகவும் யுத்தம் செய்யும்படிக்கு சேனைகளைக் கூட்டியிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய எல்லைக்கு வந்திருக்கிறார்கள், எங்களுடைய எஜமானரும் சக்கரவர்த்தியும் இராஜாவுமானவர் அவர்களை எதிர் கொள்ளுவதற்காக வலிமை யான படையுடன் நின்று கொண்டிருக்கிறார். தேவனே, பெருந்தன்மையுள்ள வலிமையும் வல்லமையும் நேர்த்தியும் நிறைந்த எஜமானரே, அவருடைய

நியாயத்தில் அவருக்கு அருகில் இருந்தருளும்; உம்முடைய வல்லமையான புயத்தால் அவருக்கு உதவி செய்தருளும், அவருக்கு ஆதரவு செய்தருளும்; உம்முடைய கண்ணின் மணியைப் போல மிகுந்த வலிமையினாலும் ஆரோக்கியத்தினாலும் காத்தருளும்; எல்லாத் தீமைகளிலிருந்தும் அவரைக் காத்தருளும். "நானே உன்னுடைய இரட்சிப்பு" என்று அவரிடம் சொல்லுவீராக என்று நாங்கள் மன்றாடுகிறோம். உம்முடைய வெளிச்சத்தையும் சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் அவரை நடத்தும். அவருக்கு தீமை செய்வதற்காக அவரை எதிர்க்க எழும்புகிறவர் களை மதியீனமாக்கும். அவருடைய திட்டங்கள் மீது உம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கட்டும். அவருடைய சேனைகளையும் அவருடைய நேச நாடுகளின் சேனைகளையும் வலிமை அடையச் செய்தருளும். அவர் தன்னுடைய எல்லா முயற்சி களிலும் வெற்றி பெற்று தனது சத்துருக்களை ஆள்வாராக. அவர் சமாதானத்தை விரும்புகிறபடியாலும் சமாதானத்தை தன் தேசங்களுக்கிடையே செயல்படுத்துகிறபடியாலும் அவர்கள் அவரிடத்திலிருந்து சமாதானத்தை நாடுவார்களாக. இரக்கங் களின் பிதாவே சமாதானத்தின் எஜமானரே எல்லா ராஜாக்களின் தலைகளிலும், அவர்களுடைய ஆலோசனைக்காரர்களின் தலைகளிலும் மனுக்குலத்தின் நன்மைக்காக சமாதானத்தின் சிந்தனையும் அமைதியின் சிந்தனையையும் நன்கு பதிப்பீராக. பட்டயம் எங்கள் தேசத்தைக் கடந்து செல்லாமலும் எங்கள் சகோதரர்களின் இரத்தம் சிந்தப்படாமலும் இருப்பதாக. எல்லா தேசங்களும் முழுமையான சமாதானத்திலும் அமைதியிலும் இணைவதாக. ஆமென். எங்கள் ஜெபங்களின் வார்த்தைகள் உம்மால் ஏற்றுக் கொள்ளப்படுவதாக."


*..... தொடரும்*

## "என் நரை மயிரை ......... ஷியோலில் (sheol) இறங்கப்பண்ணுவீர்கள்"

***யோ**சேப்பு அடிமையாக எகிப்துக்கு விற்கப்பட்டான். அது தெய்வீக மேற்பார்வையின் கீழ் நடந்தது. அவனுடைய சோதனைகளும் கஷ்டங்களும் அவனுடைய அபிவிருத்திக்கும் விசுவாசத்திற்கும் உதவின. முடிவில் பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் தேவன் அவனைக் கனப்படுத்தினார். பார்வோனுடைய சொப்பனத்திற்கு இசைவாக ஏழு செழிப்பான வருஷங்களும் அதன் பின்பு ஏழுவறட்சியும், பஞ்சமுமான வருஷங்களும் வந்தன. சொப்பனத்தின் வழிநடத்துதலின்கீழ் செயல்பட்டு, இராஜாவினுடைய காரியக்கர்த்தாவாக, யோசேப்பு பஞ்சமான ஏழு வருஷங்களை ஜனங்கள் கடந்து செல்வதற்கு தேவையான தானியங்களை முதல் ஏழு வருஷங்களில் சேர்த்துவைத்தான். இவ்வாறு யோசேப்பு அவர்களுடைய இரட்சகராக அதாவது ஜீவனை கொடுக்கிறவனாக இருந்தான்.*

*யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் அதாவது யூத தேசத்தால் தள்ளிவிடப்பட்ட இயேசுவுக்கு முன்னடையாளமாக இருந்தான். அவர் பரலோக பிதாவினால் மகிமையிலும் வல்லமையிலும் அவருக்கு அடுத்தபடியாக உயர்த்தப்பட்டார். யோசேப்பு எகிப்தியர்களுக்கு ஜீவனை பாதுகாப்பவனாகவும் அப்பம் கொடுப்பவனாகவும் இருந்தான். இயேசு அவருடைய ஆளுகையில் விருப்பமுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கு நித்திய ஜீவனாகிய அப்பத்தை கொடுத்து இன்னும் உலக மனுக்குலத்திற்கு ஜீவனை பேணிப்பாதுகாப்பவராக இருக்கப்போகிறார்.*

*பஞ்சம் யாக்கோபினுடைய குடும்பத்தையும் பாதித்தது. யோசேப்பு பார்வோனுடைய பிரபுவாக இருப்பது தெரியாமல் பத்து குமாரர்களும் எகிப்திற்கு தானியம் வாங்குவதற்குச் சென்றார்கள். யோசேப்பு அவர்களை வேவுகாரர்களா இல்லையா என்று கேட்டு அவர்களுடைய குடும்பத்தை குறித்து விசாரித்தான். பிறகு அவன் அவர்களுக்கு தானியங்களைக் கொடுத்து, பஞ்சம் இன்னும் தொடரும் என்றும் இன்னும் அதிக தானியம் அவர்களுக்கு தேவைப்படும் என்றும் கூறி, ஆனால் அவர்கள் திரும்பவும் வந்து அதை பெற்று கொள்ள விரும்பினால் அவர்கள் ஒற்றர்கள் இல்லை என்று கூறிய அவர்களுடைய கதையை நிரூபிக்க அவர்களோடு அவர்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனும் கட்டாயம் வரவேண்டும் என்று கூறினான். பென்யமீன் மற்ற சகோதரர்களைப் பார்க்கிலும் யோசேப்பினுடைய தாய்க்குப் பிறந்த நெருங்கிய சகோதரனாயிருந்தான்.*



*மீண்டும் தேவையான தானியத்துக்காக எகிப்திற்கு பிரயாணம் போக வேண்டிய சமயம் வந்தபோது, பென்யமீன் இல்லாமல் தாங்கள் செல்ல முடியாது என மற்றவர்கள் மறுத்தனர். யாக்கோபு பென்யமீனை போக அனுமதிக்க மறுத்தான். பின்பு அவன் இளைஞனை கூட்டிச் செல்லுங்கள். நீங்கள் அவனை உயிரோடே திரும்பவும் என்னண்டைக்கு கொண்டு வராமற் போனால், அது என் மரணத்திற்கு சமானமாய் இருக்கும், நான் மரணமடைந்து விடுவேன். அது என் நரை மயிரை சஞ்சலத்தோடே ஷியோலில் (கல்லறையில்) இறங்கச் செய்யும் என்றான். ஆதி. 42 : 38.*

*இதுவே வேதாகமத்தில் ஷியோல் (sheol) என்னும் வார்த்தையின் இரண்டாவது நிகழ்வாகும், அது உண்மையிலேயே கல்லறையைத்தான் குறிக்கிறது. ஆனால் நம்முடைய பொது மொழிபெயர்ப்பில் முப்பத்தியொரு (31) முறை நரகம் (பாதாளம்) என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஷியோல் என்ற இந்த வார்த்தையே ஆதாமினுடைய வீழ்ச்சிக்கு பின்னர் 4150 வருஷங்களாக வேதாகமத்தில் "பாதாளம்" என அர்த்தம் கொடுக்கப்பட்டு இருக்கும் ஒரே வார்த்தை ஆகும். உண்மையில் ஷியோல் என்ற வார்த்தை கல்லறையையே குறிக்கிறது. ஷியோலுக்கு ஒப்பான புதிய ஏற்பாட்டு வார்த்தை "ஹேட்ஸ்" (Hades) ஆகும். அப். 2 : 27-ம் வசனத்தில் சங். 16 : 10-ஐப் பற்றிய பரி. பேதுருவினுடைய மேற்கோளைப் பார்க்கவும்.* ***

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**